# பாட்டுப் பறவைகள்



0313NMPPS
62948

மதுரா

தங்கை புத்தக நிலையம்

முதற்பதிப்பு : டிசம்பர் 2003

விலை : ரூ. 45.00

867005

⇨ TITLE : PATTUP PARAVAIGAL

⇨ AUTHOR : MADURA

⇨ LANGUAGE : TAMIL

⇨ EDITION : FIRST EDITION DECEMBER 2003

⇨ PAGES : 160

⇨ PUBLISHED BY: GANGAI PUTHAKA NILAYAM
#23, Deenadayalu Street
Thyagaraya Nagar
Chennai-17

⇨ PRICE : 45.00

Typesetting : AMARAVATHI
W. Mambalam, Chennai - 33.
Cell : 9444169725

Printed by : Sri Saravanan Offset Printer
Chennai - 81.

# என்னுரை

கொஞ்சம் நில்லுங்கள்...

நான் இரண்டு வார்த்தை சொன்னபின் போகலாம் வாசிப்புக்கு.

'பாட்டுப் பறவைகள்' - எனக்குப் பிடித்தது போலவே இந்த தலைப்பு உங்களுக்கும் பிடித்திருக்குமென்று நம்புகிறேன்.

பாட்டுப் பறவைகள் - என் முதல் நாவல்.

தேவியின் கண்மணி எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தது.

நாவலின் முதுகில் என்னைப்பற்றி... எழுதச் சொன்னார்கள்.

என் அழகு (?) முகம் காட்டி சொன்னேன்,

'நான் எழுத்துலகக் குழந்தை. கற்றது கைம்மண் அளவு' என்று.

இன்றும் அப்படியே உணர்கிறேன்.

இந்த நாவல் குறித்து நான் சொல்வதைவிட வாசித்தவர்கள் சொல்வதே இந்த இடத்தில் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

'இனிய நாவல். அற்புத படைப்பு' என்று சொல்கிறார் போத்திர மங்கலம் பி. பாலசந்திரன். பழனி ச. பூமாதேவியோ, 'மதுராவின் பெயரைப் போலவே மதுரமாக

இருந்தது நாவல்' என்கிறார். 'காதல், சோதனை, தியாகம் என்று மொத்தத்தில் தரமான நாவலை தந்து அசத்திவிட்டார் மதுரா' என்று சந்தோஷப்படுகிறார் செய்யாம்பாளையம் தங்கராசு. 'கதையின் முடிவு அற்புதம்' என்கிறார் திருச்சி எஸ். லதா. சென்னை எஸ். ஜஹ்பர்காதர் 'கதையின் முடிவை படித்தவுடன் பாஸ்கர், கவிதா இவர்களின் கண்களில் மட்டும் கண்ணீர் வரவில்லை, எங்கள் கண்களிலும்தான்' என்று எழுதியிருக்கிறார். இனி நீங்கள்தான் சொல்ல வேண்டும் படித்துவிட்டு.

அடுத்து வரும் காத்திருப்பேன் கண்ணே, நாவல் மாலைமதியில் வெளிவந்தது. கதை அல்ல இந்த கதை. நிஜம். தினந்தந்தியை புரட்டியபோது கண்ணில்பட்ட நிஜம். நிஜமே நிஜத்தில் கதையாகியிருக்கிறது.

காதல் காத்திருக்கும். வினாடிகள் 'நிமிடங்கள்', 'மணிகள்', 'நாட்கள்', 'வருடங்கள்' கடந்தும் காத்திருக் கும். ஆம். காத்திருக்கும். இதுவே கதை.

காத்திருக்கிறேன். படித்துவிட்டு கடிதம் எழுதுங்கள்.

பாட்டுப்பறவைகள் நாவலை வாசகர்களுக்கு தந்த தேவியின் கண்மணி ஆசிரியர் திரு. கண்ணன் ஆதித்தன் அவர்கட்கும். மாலைமதி ஆசிரியர் திரு.பி.வி. பார்த்தசாரதி அவர்கட்கும் எனக்கு உற்சாகமூட்டும் குமுதம் 'பால்யூ' அவர்கட்கும் 'கண்மணி' நாகராஜன் அவர்கட்கும் இதய நன்றி.

பாட்டுப்பறவைகளை உங்கள் பார்வைக்கு அனுப்பி வைத்திருக்கிற என் அன்பிற்குரிய திரு. இராமநாதன் அவர்கட்கும், எளிமையாய் வலம் வருகிற திரு.திருநாவுக்கரசு அவர்கட்கும் என் இதய நன்றி. மீண்டும் சந்திப்போம்.

இதய அன்புடன்
மதுரா

# பாட்டுப் பறவைகள்

## 1

பிரசாத் பதிவுக் கூடத்தில் கவிஞர் இளமாறனின் கவிதை வரிகளை ஃபெஸ்டிரியோ போனிக் இசையில் நனைக்க காத்திருந்தார் இசையமைப்பாளர் விஜயராஜா. எட்டு மணிக்கு வருவதாகச் சொல்லியிருந்த சுசித்ரா பத்து மணியாகியும் வரவில்லை.

சுசித்ரா-விஜயராஜாவால் போன வருடம் அறிமுகப்படுத்தப்பட்டு, நேஷனல் அவார்டு வாங்கி புகழின் உச்சியில் இருக்கிறவள். அவளுடைய குரல் அவுத்தான்பட்டி அழகு கல்யாண வீட்டிலும் 'ஒன்ஸ் மோர்' கேட்கப்படுகிறது.

விஜயராஜா அடிக்கடி காது நுனி வருடுகிறார் என்றால் கோபத்தில் இருக்கிறாரென்று அர்த்தம். அவர் கோபத்துக்கு பயந்து பாஸ்கர் வெளியே நின்றான், பூமரங்களுடன் பூமரமாய்.

பாஸ்கர்-விஜயராஜாவின் உதவியாளன். உண்மையைச் சொல்வதானால் எடுபிடி. நாளை, நாளை மறுநாள் இசை பாஸ்கர் என்று வெண் திரையில் வர விசில் ஒலி எழும் என

தூத்துக்குடி

கனவு காண்கிறவன். அந்த கனவுகள் தரும் வெப்பத்தில் குளிர் காய்கிறவன்.

வேகமாய் குலுங்கி ஒரு வேன் வந்து நின்றது. மலர் மந்தையாய் இளம் பெண்கள் குதித்து இறங்கினார்கள்.

''குட்மார்னிங் சார்.''-என்றார்கள் கோரஸாய், கோரஸ் பாட வந்த பாட்டுப் பறவைகள். பாஸ்கர் பதிலுக்கு தலையசைத்து, புன்னகைத்தான்.

''என்ன சார் இங்க மரத்தோடு மரமா நிக்கிறீங்க.'' -என்று கேட்டாள் 'துடுக்கு, விஜயா.

''சுசித்ரா இன்னும் வரல்ல. மாஸ்டர் கோபத்தில் இருக்கார்.''

''அய்யய்யோ... எங்க மேலேயும் நெற்றிக் கண்ணைத் திறந்திடுவாரே...''

-என்று பயத்துடன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவர்களை உரசுவது போல சிவப்பு மாருதி கார் ஒன்று வந்து நின்றது. கதவு திறந்து இறங்கினாள் சுசித்ரா. பார்வை திருப்பாமல் அலட்சியமாய் பதிவுக் கூடத்துக்குள் நுழைந்தாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து பாஸ்கருக்கு அழைப்பு வர 'லல்லல்லா' கோஷ்டியுடன் உள்ளே நுழைந்தான். சுமக்க முடியாத அளவுக்கு வேலை காத்திருந்தது.

பாடல் பதிவு முடிந்ததும் 'நாளை வருகிறேன்' என்று சிரிக்காத முகத்துடன் சுசித்ரா போனாள். சுசித்ரா நிறைய நேரம் எடுத்துக் கொண்ட எரிச்சலில் விஜயராஜா இருந்தார்.

இத்தனைக் கிடையிலும் பாஸ்கர் ஒன்று கவனித்தான். அந்த கோரஸ் குழுவில் புதிதாக வந்திருந்த இளம் பெண்ணை, துருதுருவென்று அலைந்த அவள் கண்களை.



கனகாம்பர குவியலில் மல்லிகையாய்... அந்தப் புரத்தில் பணிப்பெண்களோடு துள்ளி விளையாடும் இளவரசியாய்...

''பாஸ்கர் சார்.''- அழைத்தாள் துடுக்கு விஜயா. அவளைச் சுற்றி 'லல்லல்லா'. சந்தோஷமாய் போனான், அந்த இளவரசியைக் குளோஸப்பில் பார்ப்பதற்கு.

''என்ன துடுக்கு?''

''இந்த மகாராணி உங்களிடம் தனியாக பேசணுமாம்'' -என்று அந்த மல்லிகையைச் சுட்டினாள் அவனுக்கு. அதிர்ச்சி இன்பமாய். அந்த இளம் பெண் நல்ல சிவப்பாய் இருந்ததால் அவள் வெட்கம் தெரிந்தது. அவள் சிரிக்க முயன்று தோற்றுப் போய்க் கொண்டிருந்தாள்.

பாஸ்கர் மவுனமாய் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அது அவளுக்கு இன்னும் கூச்சத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். தலை குனிந்தபடியே-

''என் பெயர் கவிதா''-என்றாள். உதடசைவில் கவிதைத்தனம்.

''நான் நன்றாகப் பாடுவேன். மாஸ்டரிடம் அறிமுகப் படுத்துங்களேன்.''

''வாங்க... அறிமுகப்படுத்துறேன்''-என்றான் கண் களில் பரிவுடன்.

அவள் முகம் விஜயராஜா கோபத்தில் இருக்கிறார் என்பதை மறக்க வைத்திருந்தது. நேரே அவர் முன்னால் போய் நின்றான். அவர் கண் மூடியிருந்தார்.

''சார்...''

-கண் திறந்தார்.

''இந்த பொண்ணு பேரு கவிதா, நல்லா பாடும். நிறைய கச்சேரியில பாடியிருக்குது. குரல் அப்படியொரு இனிமை. உங்க கையால அறிமுகப்படுத்த வேண்டிய குரல். நீங்க கேட்டா நிச்சயம் சொல்வீங்க... கொஞ்சம் சித்ரா, கொஞ்சம் ஜானகி...''

-கையமர்த்தி பேச்சை நிறுத்தினார். பாஸ்கரையும் கவிதாவையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து-

''பாடச் சொல்லு'' என்றார்.

''பாடுறியா''-என்று கேட்டான் பாஸ்கர். கவிதா எந்த பதிலும் சொல்லாமல்-எதை பாடுவது என்று கேள்வி கேட்காமல் 'ப்ளே' பட்டன் அழுத்தப்பட்ட டேப் ரெக்கார்டர் போல சட்டென்று பாடத் தொடங்கினாள். அது ஓரங்க சாயி கீர்த்தனை.

அந்த குரல் எதிலோ லயித்தது போல-மணல் பரப்பில் ஓடும் தெளிந்த நீரோடை போல் பட்டது. விஜயராஜாவோ அரைத் தூக்கத்தில் இருப்பது போல் இருந்தார். அப்படி இருந்தால் அவர் ரசிக்கிறார் என்று அர்த்தம்.

பாடி முடித்தவுடன் வாய் திறக்காமல் எழுந்து சென்று விட்டார். கவிதா குழப்பமாய் பாஸ்கரைப் பார்த்தாள். 'வெளியே போய் விடலாம்' என்று கண்களால் சொன்னான். எழுந்தாள். இருவரும் வெளியே வந்தார்கள்.

''என்ன மாஸ்டர் பாட்டை கேட்டுட்டு எதுவுமே சொல்லல... பிடிக்கலியா...'' -கண்கள் கண்ணீர் சிதறும் அபாயத்தில் இருந்தது.

''சே... சே... அவர் நேர்ல சொல்றதில்லை. பிடிச்சிருந்தா நிச்சயம் சான்ஸ் கொடுப்பார். இப்பிடித்தான் அந்த பொண்ணு சுசித்ரா வந்து பாடிட்டு போச்சி, கார் அனுப்பி



அழைச்சி 'நீ என் உயிர்' படத்துக்கு பாடச் சொன்னார். நேஷனல் அவார்டு கிடைச்சுது. சூப்பர் ஹிட்டாகி இன்னிக்கு மெட்ராசுக்கும் பம்பாய்க்குமா பறந்துக் கிட்டிருக்குது.''

எனக்கென்னவோ நம்பிக்கையில்லை. இதுவரை ஏழு மியூஸிக் டைரக்டரைப் பார்த்துட்டேன். உங்க முகத்தை பார்த்தாதான் நம்புற முகமா தெரியுது. நீங்க மியூசிக் டைரக்டரா வர்ற காலத்திலயாவது சான்ஸ் குடுங்க சார்'' - கசப்பாய் ஒரு சிரிப்பு சிரித்தாள்.

''பேனா குடுங்க சார்''-கொடுத்தான். தன் கையிலிருந்த வார இதழின் கடைசி பக்க மூலையில் எதோ எழுதினாள். அந்த மூலையை கிழித்தாள். பேனாவையும், துண்டுத்தாளையும் அவன் கையில் கொடுத்தாள்.

''சார் என்னோட அட்ரஸ். கண்டிப்பா ஒரு நாள் வாங்க.''

-நிலா ஒன்று தன் வானுக்கு அழைப்பது போல் இருந்தது. பாஸ்கர் பதில் சொல்ல வாய் திறப்பதற்குள் நட்சத்திரக் கூட்டம் போல எங்கிருந்தோ கோரஸ் பட்டாளம் ஓடி வந்தது. துண்டுத்தாளை பேண்ட் பாக்கெட்டுக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான்.

## 2

ஞாயிற்றுக்கிழமை. கவிழ்ந்த நிலையில் சிகாமணி கனத்த தூக்கத்திலிருக்க' பாஸ்கர் ஜன்னலில் தவமிருந்தான். அவன் காலடியிலிருந்த பிளாஸ்டிக் பக்கெட்டில் மூன்று பேண்ட், ஐந்து சர்ட் குளியலுக்காய் காத்திருந்தது.

மத்திய நூலக… தூத்துக்குடி

இரண்டு மணி ஏழு நிமிடத்தையும், ஒரு சோப்பையும் கரைத்து விட்டு, கீழ் போர்ஷன் சகுந்தலா மாமி பாத்ரூமி லிருந்து வெளிவர படிகளில் தடதடத்து பாத்ரூமை பிடித்தான்.

அவசரமாய் பிளாஸ்டிக் பக்கெட்டில் தண்ணீரை கொட்டினான். 'மறந்து பணம் ஏதாவது' நனைந்த பேண்ட் பாக்கெட்டுகளை துழாவினான். 'அட பணம்' சந்தோஷமாய் வெளியே எடுத்தான். துண்டுத்தாள். கவிதாவின் விலாசம்.

எழுத்துக்கள் பாதி நனைந்து மீதி விசுவாசமாய் காத்திருந்தன. வீட்டு எண் மூன்றா, எட்டா என்று தெரியாதபடி கரைந்து போயிருந்தது.

அதிவேகமாய் துவைத்து, சிக்கனமாய் குளித்து உற்சாகமாய் பாட்டொன்றை உதடுகளில் வழியவிட்டபடி அறைக்குள் நுழைந்தான். படுக்கையில் அமர்ந்திருந்தான் சிகாமணி. பாஸ்கரையே வைத்த கண் வாங்காமல் அதிசயப் பொருள் போல் பார்த்தான்.

பாஸ்கர் அவனை கொஞ்சமும் பொருட்படுத்தாதது போல மும்முரமாய் தலை துவட்டினான். ஹேர் ஆயில் தடவினான். வேறு உடைக்குள் நுழைந்தான்.

''பாஸ்கரா'' - அழைப்பை உதாசீனம் செய்தான். தலை வாரத் தொடங்கினான்.

''டேய் பாஸ்கரா'' - நிதானமாய் பவுடர் ஒற்றினான். ஒரு முடிக்கற்றையை யதேச்சையாய் நெற்றியில் புரள்வது போல் ஒப்பனை செய்தான். கண்ணாடியில் புன்னகை செய்து பார்த்தான். முன் பற்கள் தெரிய சிரித்தான். புருவம் தூக்கி பார்த்தான்.



''டேய் பாஸ்கரா... மடையா... உனக்கு வந்திருக்கிற வாழ்வு'' - பொறுமை இழந்து கத்தினான்.

''ஏண்டா கத்துறே... ஒரு ஆம்பிளை கொஞ்சம் எடுப்பா ஹேண்ட்ஸமா இருந்துடக் கூடாதே... பொறாமையே வந்திடும்'' -அழகிப் போட்டியில் அழகிகள் மேடையில் நடப்பது போல அறையின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு நடந்து காட்டினான்.

''டேய் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதடா... பக்கத்தில வந்து உட்காரு... உன்னால ஒரு காரியம் ஆக வேண்டியதிருக்கு.''

''மரியாதை தெரியாத பசங்க கிட்ட பேச நான் தயாரா இல்லை. இன்னிக்கு ஐயா ரொம்ப பிசி. ராத்திரி பத்து மணிக்கு மேல்தான் ரூமுக்கு திரும்புவாரு.''

''டேய் நேரம் காலம் தெரியாம வசனம் பேசாதடா. உன்னை நம்பி சம்மதம் சொல்லிட்டேன். நீ தான் காப்பாத்தணும். என் பக்கத்தில் வந்து உட்காருடா விளக்கமாச் சொல்றேன்.''

''உன் விளக்கம் எனக்கு தேவை இல்லை. எனக்கு தேவை என் செருப்பு''-பாஸ்கரன் தேடத் தொடங்கினான்.

''நான் இல்லாத நேரம் செருப்பை போட்டு ரவா லட்டு வாங்கித் தின்னுட்டியாடா?''

''அதை எவன் வாங்குவான். பக்கத்து காம்பவுண்ட் முருங்கை மரத்துல கண் திருஷ்டிக்கு தொங்குதான்னு பாரு.''

''சொல்லுவேடா சொல்லுவ''-படுக்கைக்கு அடியில் சிறு பிள்ளையாய் தவழ்ந்து செருப்பு கண்டுபிடித்தான்.

''கண்டு கொண்டேன் நான்...''

''பாடாதடா, வெளியே வா.''-செருப்புடன் மெல்ல வெளியே வந்தான்.

''பக்கத்தில உட்காருடா.''

''சிகாமணி உட்கார்றதுக்கு முன்னால...''

''முதல்ல உட்காருடா.'' - செருப்பை வாசலுக்கு வீசி விட்டு, சிகாமணி அருகில் அமர்ந்தான் பாஸ்கர்.

''சிகாமணி, எனக்கு ரீரெக்கார்டிங் வேலை இருக்குது. விஜயராஜா சரியா அஞ்சு மணிக்கு வரச் சொல்லி இருக்கார்.''

''டேய் பொய் சொல்லாதடா... நேத்து அவரைப் பார்த்தேன். வேலை இன்னிக்கு இல்லைன்னு சொன்னாரு. ஒரு உண்மையான தெய்வீக காதலுக்கு ஹெல்ப் பண்ணுடா''-கெஞ்சலாய் சிரித்தான்.

''இது தெய்வீக காதல் இளிப்பா...ம் சொல்லித் தொலை. காலைல நீர்காக்கா முகத்தில் முழிக்கும் போதே நினைச்சேன், இன்னிக்கி எதோ விபரீதமா நடக்கப் போகுதுன்னு.''

''உன் கறுப்பு நாக்கை சுருட்டி வைச்சுட்டு சொல்றதைக் கேளு. உனக்கு மாலதியை தெரியும்தானே...''

''உன்னத் தெரியாத்தனமா காதலிச்சிட்டு முழிக் கிறாளே அந்த மாலதியா...?''

''சொல்றதை கேளுடா. நான் மாலதியை சினிமாவுக்கு கூப்பிட்டேன். அவளுக்கு தனியா வர வெட்கம்...''

''வெட்கமா இருக்காது. நீ காஞ்ச மாடு. அந்த பயமா இருக்கும்.''



-சிகாமணிக்கு கோபம் வந்தது. ''உங்கிட்ட சொல்றேன் பாரு. என் புத்தியை...''

''செருப்பால அடிக்க வேண்டாம். மீதி புராணத்தை சொல்லு.''

''சினிமாவுக்கு தனியா வர மாலதிக்கு வெட்கம். தன் பிரெண்ட் கனகா வந்தாதான் வருவேன்னு சொல்லிட்டா. வேறு வழியில்லாம நாலு டிக்கெட் எடுத்துட்டேன்.''

''எதுக்கு மூணு பேருக்கு நாலு டிக்கெட்...?''

''உனக்கும் சேர்த்துதான்.''

''நமக்கு சரிவராது. நீ மட்டும் போ.''

''பாஸ்கர் இரண்டு பொண்ணுங்கடா. தனியா போக உதறுது.''

''உன் காதலை வளர்க்கிறதுக்கு நான்தான் கிடைச்சேனா... அதுக்கு வேற ஆளைப் பாரு.''

''நண்பா பாஸ்கரா, நீ ரொம்ப நல்லவனாம். த்ரீ ஏ பஸ்சில உனக்காக நான் அடி வாங்கின நன்றிக் கடனை மறக்க மாட்டியாம். நைட் சிக்கன் சிக்ஸ்டி பைவ் வாங்கித் தருவேனாம். நீ என் கூட சினிமாவுக்கு வருவியாம்'' -கெஞ்சலாய் கொஞ்சல் கலந்து பேசினான்.

''இப்பிடி மட்டும் பேசாத. எங்க வேணும்னாலும் வர்றேன். எத்தனை மணி ஷோ.''

''ஏழு மணி.''

''தியேட்டர்...?''

''அபிராமி காம்ப்ளக்ஸ்.''

''சரி. நான் ஒரு பிரண்டை பார்க்க வேண்டியதிருக்கு. பார்த்துட்டு ஏழு மணிக்குள்ள அபிராமி வந்திட்றேன்.''

''அது எப்படிடா போயிட்டு வர முடியும். நீ ஏமாத்திடுவே.''

''நம்புடா... இப்ப மணி என்ன...?''

''நாலு அம்பது.''

''இன்னும் நூற்றி முப்பது நிமிஷம் இருக்கு. மெட்ராசையே ஒரு கலக்கு கலக்கிட்டு வந்திடலாம். தியேட்டர்ல சந்திப்போம்''-என்று சொல்லிவிட்டு, வாசலுக்கு வந்து செருப்புக்குள் கால் நுழைத்து, படிகளில் தடதடத்து இறங்கினான்.

''பாஸ்கர்'' - நிமிர்ந்தான். ஜன்னலில் சிகாமணி முகம்.

''கொஞ்சம் நில்லு.'' - நின்றான். மூச்சிரைக்க சிகாமணி வந்தான்.

''உன் மேல எனக்கு இன்னும் நம்பிக்கை வரல்ல. நாலு சினிமா டிக்கெட்டையும் நீயே வைச்சிக்க. அப்படி வைச்சிருந்தாதான் உன் மனசு கிடந்து அடிச்சிக்கும். அப்படி நீ வரல்ல...''

''நீ மனுஷனா இருக்க மாட்டே. நாயா மாறிடுவே... சரிதானா?''

- சிகாமணி கையிலிருந்த டிக்கெட்டை 'வெடுக்' கென்று பிடுங்கி பேண்ட் பாக்கெட்டுக்குள் திணித்துக் கொண்டு வேகமாய் நடந்தான் பாஸ்கர்.

## 3

அந்த பிள்ளையாரைப் பார்த்து உறுதி செய்து கொண்டான், அது பிள்ளையார் கோவில் தெரு என்று. மூக்குக்கு எட்டும் தூரத்தில் கூவம் இருந்தது.

மழை நேரமாதலால் தெருவில் பன்றிகளுக்கு 'ரெடிமேட்' நீச்சல் குளங்கள். குழந்தைகள் 'கப்பல்' விட்டனர். தெரு நாய் ஒன்று எச்சில் சோற்றுக்கு அலைய அதன் குட்டிகள் அதன் பின்னால் பாலுக்கு அலைந்தன.

தெருவில் ஓடுகள் சுமந்த வீடுகளும், தென்னங்கீற்று சுமந்த குடிசைகளும் தெரிந்தன. 'இதில் எந்த வீட்டில் கவிதா இருப்பாள்?'

''தம்பி பாட்டு பாட்ற கவிதா வீடு தெரியுமா...?''

-வித்தியாசமாய் பார்த்துவிட்டு போனான். 'இனி என்ன செய்வது' என்று திகைக்கையில் பாரதியின் வரிகள் காதில் விழுந்தது. இனிமை தடவிய குரல். கவிதாவின் குரலேதான். நடந்தான் வேகமாய் குரல் வந்த திசையை நோக்கி.

''அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்-அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு-தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ.
தத்தரிகிட தத்தரிகிட...''

- பாஸ்கர் அந்த ஓட்டு வீட்டை அடையவும் கவிதா பாடிக் கொண்டே வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது. விடிகாலை பிச்சியாய் மலர்ந்தாள்.

மத்திய நூலகம்

''வாங்க சார். ஏழு கடல் தாண்டி இளவரசியை மீட்க வர்ற மாதிரி சாக்கடையைத் தாண்டி வந்திட்டீங்களே... உள்ளே வாங்க சார்''

- உள்ளே நுழைந்ததும், மூலையிலிருந்த கோரப் பாயை எடுத்து விரித்தாள்.

''நம்ம பங்களாவில சோபால்லாம் கிடையாது சார். பத்தமடை கோரப் பாய்தான். உட்காருங்க சார். இதோ வர்றேன்.''

- காணாமல் போய் அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் வந்தாள். கையில் ஒரு கலர் பாட்டிலும், ஐந்தாறு வாழைப் பழங்களும் இருந்தது. பாஸ்கர் இன்னும் நின்று கொண்டு தான் இருந்தான்.

''நின்னுக்கிட்டேயிருக்கணும்னு எதாவது வேண்டு தலா? கூச்சப்படாம உட்காருங்க சார். ஒண்ணும் ஒட்டிக்காது''

- பாயின் ஓரத்தில் சம்மணமிட்டு அமர்ந்தான். பேண்ட் ஒத்துழைக்க மறுத்தது. அவள் பாயின் மறு கோடியில் அமர்ந்தாள். ஏனோ மெல்லச் சிரித்தாள். அவள் சிரிப்பு அவனுக்குள் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது. உட்கார்ந்த நிலையையும், தன் புது பேண்ட்டையும் ஒரு முறை ஓரக் கண்ணால் கலவரமாய் பார்த்துக் கொண்டான்.

''நான் சிரிச்சது உங்க பேண்டை பார்த்து இல்லை. சின்ன வயசில படிச்ச கதைகள்ல வர்ற மந்திரப் பாய் மாதிரி இந்தப் பாய் திடீர்னு பறந்திடிச்சின்னா என்ன செய்யற துன்னு நினைச்சுப் பார்த்தேன். சிரிப்பு வந்திடுச்சி''

-மீண்டும் சிரித்தாள்.



''இப்பிடி அடிக்கடி சிரிக்காதீங்க. எனக்கு சின்ன வயசில படிச்ச சொர்ணத்தீவு மோகினி ஞாபகம் வருது''

-இந்த முறை சுகாசினித்தனமாய் சிரித்து, சிரிப்புக்கிடையே-

''சார் நீங்க ரொம்ப நல்லாவே பேசறீங்க''

''இப்படிச் சொல்ற பொம்பளைங்களை நம்பக் கூடாதுன்னு எங்க பாட்டி சொல்லி இருக்காங்க.''

''உங்க பாட்டியை நான் உடனே பார்க்கணுமே''

''பெரிய பாடகியாவரணுங்கிற உங்க லட்சியம் என்ன ஆகிறது.''

''ஏன் உங்க பாட்டி பாட விடாம தொண்டையை பிடிச்சுக்குவாங்களா?''

''சே... சே... எங்க பாட்டி செத்து ரொம்ப வருஷமாச்சி... நீங்க பார்க்கணும்னு சொன்னீங்களே''

- சிரிப்பு அந்த வீட்டை நிரப்பியது. அவன் முன்னால் கலர் பாட்டிலையும், வாழைப் பழங்களையும் எடுத்து வைத்தாள்.

''உங்களுக்கு சொந்த ஊர் மெட்ராஸ்தானா...?''

''இல்லை. மதுரை பக்கத்தில ஒரு கிராமம்.''

''இங்க நீங்க தனியாத்தான்...''

''நான் பயந்த பொண்ணு தனியா இருக்க முடியுமா சார். எவனாவது கதவு தட்டுவான். இல்லை நானா திறக்கிறதா கதை கட்டி விடுவான். துணைக்கு இந்த குப்பத்து பாட்டி ஒண்ணு படுக்குது.''

''உங்க அம்மா, அப்பா''

''அது ஒரு தனி குறு நாவல். ஒரு நாள் சாவகாசமா சொல்றேன்.''

- அந்த மதிவதனத்தில் மேகமாய் சோகம்.

''உங்ககிட்ட நிறைய குறுநாவல். சிறுகதைல்லாம் இருக்குன்னு சொல்லுங்க.''

''நிஜமாவே நல்லா கதை கவிதை எழுதுவேன் சார். என் கவிதை நோட்டைப் பார்க்கிறீங்களா...''

''அய்யய்யோ சும்மா விளையாட்டுக்குக் கேட்டேன். இந்த கவிதை சமாச்சாரத்தை இன்னொரு நாள் வைச்சுக்கலாம்''

-கவிதாவின் முகத்தில் சிரிப்பு வந்திருந்தது.

''ம்... சொல்லுங்க சார். இந்த ஏழை வீட்டுக்கு ஏன் திடீர் விசிட்...?''

''பக்கத்தில ஒரு பிரண்டை பாக்க வந்தேன். உங்க ஞாபகம் வந்துச்சு. வந்துட்டேன்.''

''சரி நல்லாவே பொய் சொல்றீங்க'' -என்று சொல்லி விட்டு ஓரக்கண்ணால் பார்த்து உதட்டுக்குள் சிரித்தாள். பொய் சட்டென்று வெளிச்சத்துக்கு வந்ததால் மனதுக்குள் வெட்கப்பட்டான். அவசரமாய் சிரித்து சமாளிக்க முயன்று தோற்றான்.

''விஜயராஜா கிட்ட என்னைப் பற்றி நிறைய சொன்னீங்களே... இனிமையான குரல். ஏகப்பட்ட கச்சேரியில் பாடியிருக்குது. கொஞ்சம் சித்ரா, கொஞ்சம் ஜானகி... என் குரலை கேட்காமலே ஏன் சார் அப்படி பொய் சொன்னீங்க?''



''கூவத் தெரியாத குயில் இருக்க முடியுமா... உங்க முகத்தை பார்த்ததும் தோணுச்சி. சொன்னேன்.''

''என்னைப் பற்றி ஏதாவது சொன்னாரா சார்...?''

''கொஞ்சம் மெலிவா இருக்கிறதா சொன்னார்''

''கடிக்காதீங்க சார்... என் குரலைப் பற்றி...''

''கண்டிப்பா எதிர்காலம் இருக்கு. பார்க்கலாம். அந்த பொண்ணு பேரு என்னன்னு கேட்டு டைரியில குறிச்சிக் கிட்டாரு.''

- கவிதாவின் முகம் தாமரையாய் மலர்ந்தது. 'இந்த பொய்யை எதற்காகச் சொன்னேன்... அவளை சந்தோஷப் படுத்துவதற்காக. இல்லை நான் சந்தோஷப்படுவதற்கு, அவள் சந்தோஷ முகம் பார்த்து. அந்தக் கண்களை, அந்த உதட்டை, அந்த மூக்கை வருடக் கணக்காய் பார்த்துக் கொண்டிருப்பது போல ஒரு பிரமை.

''என்ன சார் பழைய படத்து ஹீரோ மாதிரி கண் அசையாம பார்த்துக்கிட்டிருக்கீங்க... பழத்தை எடுத்து சாப்பிடுங்க''

-கவிதாவின் குரலால் தன் நிலைக்கு வந்தான். அவசரமாய் பழம் எடுத்து சாப்பிட்டான். சிகாமணியின் நினைவும், பேண்ட் பாக்கெட்டில் இருக்கும் நான்கு சினிமா டிக்கெட்டுகளின் நினைவும் சேர்ந்தே வந்தது. பதட்டமாய் கைக்கெடிகாரம் பார்த்தான். 6-30. எழுந்து கொண்டான்.

''என்ன எழுந்திட்டீங்க...?''

''ஒரு பிரண்டை பாக்க ஏழு மணிக்கு வர்றதா சொல்லியிருந்தேன்.''

''சரசு மார்க்?''

''நீங்களே குடிச்சிடுங்க. இன்னொரு நாள் சந்திக்கலாம்''

-கண்களால் சிரித்து விடை கொடுத்தாள். வேகமாய் ரோட்டுக்கு வந்து, ஆட்டோ நிறுத்தி, ஏறி- 'அபிராமி காம்ப்ளெக்ஸ்' என்று சொன்ன பிறகு தான் பாஸ்கருக்கு நிம்மதி வந்தது.

## 2

பாஸ்கரனும் சிகாமணியும் தங்கள் காம்பவுண்டை நெருங்கும் போது துல்லியமாக இரவு 12 மணி. துண்டு நிலவும், அதன் கூட்டணி நட்சத்திரங்களும் மழைக்கால மேகத்துக்குள் புதைந்து போயிருந்தன. கடிகாரத்தின் ரேடிய ஒளிரலை கவனித்த சிகாமணி மனதுக்குள் நடு ஜாமம், கும்மிருட்டு, அமானுஷ்ய அமைதி என்ற வார்த்தைகளை சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

அதே நேரம் முதுகில் எதோ தொட, அலற முயற்சித்து, பயத்தில் தொண்டை ஒத்துழைக்காமல் ''ஹக்... ஹக்'' என்று சப்தம் எழுப்பினான்.

''என்ன சிகாமணி பயந்துட்டியா... நான்தான் தொட்டேன்.''

''முட்டாள். முன்னால வாடா.''

''பின்னால வர்றதுதான் கஷ்டம். சரியா பன்னிரெண்டு மணி. மோகினி தொடை எலும்பு சாப்பிட்ற நேரம்.''

''உன்னால பேசாம வர முடியாதா... சகுந்தலா மாமி முழிச்சிட்டா அவ்வளவுதான். நேத்து பதினோரு மணிக்கு



வந்ததுக்கே திட்டி' தீர்த்திடுச்சி.'' -காம்பவுண்டின் மரக்கதவு சைக்கிள் செயினால் இணைக்கப்பட்டு, பெரிய பூட்டு தொங்கியது.

''பாஸ்கர் வேற வழியில்லை. சுவர் ஏறிக் குதிச்சிட வேண்டியதுதான்.'' - இருவரும் ஒரே நேரத்தில் சுவர் ஏறினார்கள்.

''சிகா. குதிச்சா சத்தம் கேட்கும் மெல்ல இறங்கு.'' - சுவர் பிடித்து இறங்க முயற்சித்த சிகாமணி முதுகில், எங்கிருந்தோ பறந்து வந்த பொருள் ஒன்று 'தொம்'மென்று மோத ''அம்மா'' என்று அலறியபடி தரையில் மல்லாந்து விழுந்தான். மதில் மேல் திகைத்துப்போய் நின்றிருந்தான் பாஸ்கர்.

''யாருடா அது...?'' - சேது மாமாவின் குரல். கோபமாய்க் கேட்டது. கொஞ்சம் நடுக்கம்.

''நாங்கதான் மாமா, சிகாமணியும் பாஸ்கரும்.'' - அடுத்த நிமிடம் டார்ச் ஒளி வட்டம், சிகாமணி முகத்தில் பட்டு, பாஸ்கரன் முகத்துக்குத் தாவியது.

''ம்... கீழே இறங்கு.'' - குதித்தான். முதுகைத் தடவியபடி நின்று கொண்டிருந்தான் சிகாமணி. காலடியில் சின்ன சைஸ் மரக்கட்டை.

வரிசையில் இருந்த மூன்று போர்ஷன்களும் விழித்துக் கொண்டன. இருவரும் மெல்ல நடந்து சேது மாமாவை நெருங்கினார்கள். மாமாவுக்குப் பின்னால் சகுந்தலா மாமி.

''இது என்ன புது வழக்கம். கேட்டைத் திறக்கச் சொல்றதுதானே...''

''மாமி லேட்டா வந்தா திட்டுவாங்க. அதனால தான்...''

''நானும் திருடனோன்னு நினைச்சி கட்டையைத் தூக்கி எறிஞ்சிட்டேன். மனசில வச்சிக்காத சிகாமணி. சாரி...''

''எதுக்கு மாமா சாரி. எங்க மேலதான் தப்பு.'' -என்றார்கள் இருவரும் கோரஸாய்.

''ம்... போங்க.'' - என்றார். சகுந்தலா மாமி கோபமாய் வாய் திறந்தாள். அதற்குள் இருவரும் படிக்கட்டைத் தொட்டிருந்தார்கள்.

மேலே வந்ததும் பேண்ட் சர்ட் கழற்றாமல் படுக்கையில் விழுந்தான் சிகாமணி. பாஸ்கர் லுங்கிக்கு மாறி, முகம் கழுவி, கொஞ்சம் தியானித்து, பாய் விரித்துக் கேட்டான்.

''டிரஸ் சேஞ்ச் பண்ணப் போறியா?''

''லைட்டை அணைக்கட்டுமா?'' - பேசாமல் படுத்திருந்தான். கீழே சகுந்தலா மாமியின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

''ஏய் சிகா... கழுதை... லைட்டை அணைக்கவா...'' -எழுந்து உட்கார்ந்தான்.

''நீயெல்லாம் ஒரு நண்பனாடா. அந்த கிழவன் நடு முதுகில கட்டையைத் தூக்கி எறிஞ்சானே. எலும்பு ஒழுங்கா இருக்குதா இல்லை உடைஞ்சிட்டுதான்னு பாத்தியா?''

''பெரிய அசகாயசூரன் மாதிரி பேசுவே... ம்... காட்டு பார்ப்போம்'' - சட்டை உயர்த்தி முதுகு பார்த்தான். கட்டை பட்ட இடம் கொஞ்சம் சிவந்து மேடிட்டிருந்தது. தைலம் எடுத்து பூசினான் பாஸ்கர்.

''சிகா, நீர்காக்கா ஆள் யாருன்னு தெரிஞ்சிக்கிட்டு தான் வீசியிருப்பாருன்னு நினைக்கிறேன்.'' - என்றான் கேலிச் சிரிப்புடன்.



''இருக்கலாம். நான் ஒரு முட்டாள்தனம் பண்ணிட்டேன். உன்னை முதல்ல இறங்கச் சொல்லியிருக்கணும்.'' என்றான் வலியுடன்.

லைட் அணைக்கப்பட்டது. இருவரும் கண்மூடி படுத்தார்கள். இருவருக்குமே நெடுநேரம் உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தார்கள். காரணம் சிகாமணிக்கு முதுகில் தெறித்த வலி. பாஸ்கருக்கு கண்ணுக்குள் நின்ற கவிதா.

## 5

அந்த ஆட்டோ சின்ன குலுக்கல்களுடன் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தது. அதன் பின்புறம் 'கர்ப்பிணி பெண்களுக்கு இலவசம்' என்றது. உள்ளே பாஸ்கரும், சிகாமணியும் முகம் பார்த்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சிகா... எனக்கு வேலை இல்லை. நீ எதுக்கு பேனரை பாதியில போட்டுட்டு எழுந்திட்டே?''

''வெறுப்பா இருந்திச்சி. கிழவன் கட்டையைத் தூக்கி எறிஞ்ச முதுகு வலி வேற. அதான் கிளம்பிட்டேன்.''

''டிரைவர்கிட்ட நேரே போகச் சொன்னே... எங்கே தான் போறதா உத்தேசம்?''

''கடற்கரைக்கு போயி ரொம்ப நாள் ஆச்சி. மணல்ல உட்கார்ந்து சுண்டல் கொறிச்சிக்கிட்டே பழைய கதை பேசலாம்னு ஒரு ஆசை.''

''பழைய கதைனா, கிபியா, கிமுவா?''

மத்திய நூலகம்

''கிபிதான். ஸ்ரீமத் சவுந்தரபாண்டிய சந்திரவதன முத்துராஜாவின் பேரனோட மழலைப் பருவத்து இன்ப நாட்கள்.''

''யாருடா அது... ஸ்ரீமத் சவுந்தரபாண்டிய சந்திரவத னன்னு, எதோ நீளமா சொன்னியே...''

''அதுதான் எங்க தாத்தா.''

''அடச்சீ... உங்கதையா?'' - ஆட்டோ ஒரு சின்ன குலுக்கலுடன் 'பிரேக்'கிட்டு நின்றது.

''ஏம்மா உனக்கு அறிவிருக்குதா... வீட்ல சொல்லிட்டு வந்திட்டியா. சாவுறதுக்கு என் ஆட்டோதான் கிடைச்சுதா... எத்தனை நம்பர்ல பல்லவன் ஓடுது.'' - ஆட்டோவை உரசியபடி சல்வார் கம்மீஸில் நின்றிருந்தாள் ஒரு இளம்பெண். டிரைவரின் அத்தனை திட்டுக்களையும் ஏற்றுக் கொண்டது போல் புன்னகையுடன்-

''ஹாய்'' - என்றாள் உற்சாகமாய்.

''ஹேய் மாலு குட்டி'' - என்று கத்தியபடி ஆட்டோவி லிருந்து இறங்கினான் சிகாமணி.

''ஆட்டோவை கொஞ்சம் ஒதுக்கி நிறுத்து. வெயிட்டிங் போட்டுக்க.'' - என்றான் எரிச்சலுடன் பாஸ்கரன்.

மூன்று நிமிடம் கைகளை வேகமாய் ஆட்டி, கண்களை அகலமாய் விரித்து, கடைவாய் பற்கள் வரை காட்டி அபிநயித்து மாலதியிடம் பேசி விட்டு, ஆட்டோவை தொட்டபடி உம்மென்று நின்றிருந்த பாஸ்கரன் அருகில் வந்தான் சிகாமணி.

''பேசி முடிச்சிட்டியா...?''



''பாஸ்கர்... அது வந்து... நம்மை பார்த்துத்தாண்டா ஆட்டோவுக்கு குறுக்கே வந்து நிறுத்தினாளாம்.''

''நான் கேட்டது... பேசி முடிச்சாச்சா...? கடற் கரைக்குப் போகலாமா?''

''வந்து... பாஸ்கர்... ஒரு முக்கியமான இடத்துக்கு மாலதி போக வேண்டியதிருக்காம். நான் துணைக்கு வரணும்னு ஆசைப்பட்றா... அதனால...''

''நான் கடற்கரையில காந்தி சிலை பக்கத்திலே தேமேன்னு உட்கார்ந்திருக்கணும். நீ அரை மணி நேரத்தில அங்க வந்திடுவே சரிதானா...?''

''பாஸ்கர் உனக்கு உடம்பு பூரா மூளைடா...''

''சரி ஆட்டோவுக்கு காசு எடு.''

''ஆட்டோவுக்கா... ஐம்பது ரூபாய் முழுசா இருக்குது.''

''முழுங்கிட மாட்டேன். மீதியை காந்தி சிலைக்கு கீழே வைச்சி எண்ணி வாங்கிக்க.'' - பேண்ட் பாக்கெட்டி லிருந்து தயக்கமாய் எடுத்த ஐம்பது ரூபாய் தாளை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு ஆட்டோவில் ஏறினான் பாஸ்கர்.

ஆட்டோ, பாஸ்கரை காந்தி சிலை முன் உதிர்த்து விட்டுச் சென்றது. நிமிர்ந்து பார்த்தான். காந்தி சலனமின்றி நின்று கொண்டிருந்தார். 'சிகாவுக்காக காத்திருக்க வேண்டாம்' என்று தீர்மானித்தவனாய் கடலை நோக்கி நடந்தான்.

கடற்கரை கடைகள் உற்சாகமாய் தங்கள் பணியைத் தொடங்கியிருந்தன. கருப்பட்டியை நோக்கி வரும் ஈக்

கூட்டமாய் மக்கள் கடற்கரையை நிரப்பிக் கொண்டிருந்தனர். சூரியன் தன் மஞ்சள் வெயிலை சாவகாசமாய் சுருட்ட ஆரம்பித்திருந்தான். சுண்டல்கார பையனும், பூக்காரச் சிறுமியும் தங்கள் விற்பனைத் திறனைக் காட்டத் தொடங்கி இருந்தனர். மெலிந்த குதிரைகள் உல்லாச சவாரிக்காய் காத்திருந்தன.

கடல் அலைகள் கோபமோ தாபமோ இல்லாமல் கடமை போல சுரத்தில்லாமல் வந்து போய்க் கொண்டிருந்தது. அலைகளுக்கிடையில் பாசி ஒன்று மனித மனம் போல அல்லாடியது.

பாவாடையைத்தூக்கிப் பிடித்தபடி பதினெட்டு ஒன்று அலைகளிடம் ஓடிப்பிடித்து விளையாடியது. மூக்குக்கு கீழே பூனை ரோமம் படர ஆரம்பித்திருந்த பதினாறு அவள் கெண்டைக்காலை இமை மூடாமல் பார்த்தது.

வெறுப்புடன் முகம் திருப்பினான். படகோர ஜோடி ஒன்று சூரியன் மறைவதற்குள் அவசரம் காட்டியது. எரிச்சலுடன் சற்று கடலோரமாய் நடந்து செருப்பு உதறி மணலில் மல்லாந்தான்.

வானம் நிறைய துண்டு மேகங்கள் சுமந்திருந்தது. மேகங்களை நிறம் மாற்றி வேடிக்கை பார்த்தது சூரியன். அவசரக்கார நிலவு கிழக்கே முகம் வெளிறி நின்றது. 'மழை வருமா' கண்மூடி யோசித்தான்.

கன்னத்தில் ஜில்லிப்பாய் ஒரு சொட்டு நீர் விழுந்து தெறித்தது. கண் விழித்தான். ஈரக் கைகளுடன் கவிதா. சட்டென்று உடல் முழுவதும் மின்சாரமாய் சந்தோஷம் பரவிற்று.

''என்ன சார் பயந்திட்டிங்களா?''



''மழையோன்னு நினைச்சேன். மழை மாதிரி நீங்க வந்திருக்கீங்க உட்காருங்க.''

''சார் தினமும் கடற்கரைக்கு வருவீங்களா...?''

''மாசத்துக்கு இரண்டு தடவை வருவேன் என் பிரெண்ட் சிகாமணியோட. அவனுக்காகத்தான் காத்திருக்கேன்... நீங்க.''

''போரடிச்சுது... புறப்பட்டு வந்துட்டேன்.''

''இங்கு பொழுதுபோக்கு என்ன இருக்குது.''

''மனுஷங்களை வேடிக்கை பார்க்கிறதே ஒரு பெரிய பொழுது போக்குதானே...''

''சரிதான்... உங்க அப்பா, அம்மாவைப் பற்றி கேட்டதுக்கு அது ஒரு குறுநாவல்... சாவகாசமாக சொல்றேன்னு சொன்னீங்களே, மூன்றில் ஒரு பங்கா சுருக்கி இப்ப சொல்லுங்களேன்.''

- கவிதாவின் முகம் சட்டென்று மாறிப் போனது. அவசரமாய் ஒரு சோக நிழல் படர்ந்தது. இதை கேட்டிருக்க வேண்டாமோ என்று உள்ளுக்குள் நினைத்தான். அடுத்த விநாடி அவள் முகம் மேகம் விலகிய நிலவாகியது. பளிச்சென்று சிரித்தாள்.

''சொல்றேன். நான் பாவாடை சட்டை போட ஆரம்பிச்ச நேரம் அம்மாவை கடவுள் அழைச்சிக்கிட்டாரு. நானும் எங்க அண்ணாவும்தான். அப்பா ஏனோ இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கல. தூரத்து பாட்டி ஒண்ணை அழைச்சிட்டு வந்து பொங்கி போட வைச்சாரு. என் பொண்ணு படிச்சா மட்டும் போதாது. எல்லாம் தெரிஞ்சுக்கணும்னு வீணை கிளாஸ், பாட்டு கிளாஸ், டான்ஸ் கிளாஸ்னு ஏற்பாடு பண்ணிட்டாரு. நானும்

ஆர்வமா படிச்சேன். எங்க அண்ணனுக்கு சுத்தமா படிப்பு வரல்ல, ஆனா காதல் வந்திருச்சு. வேற்று சாதி பெண்ணோட ஒரு நாள் மாலையும் கழுத்துமா வந்து நின்னான். அப்பா எதுவுமே சொல்லல. திடீர்னு ஒரு நாள் நெஞ்சு வலின்னு சொன்னார். ஆஸ்பத்திரிக்கு ஓடினோம். அதுக்குள்ளே அம்மா கிட்ட போயிட்டாரு. அப்பா பெரிசா ஒண்ணும் சேர்த்து வைச்சிட்டுப் போகல்ல. அதுக்கப்புறம்தான் வாழ்க்கையில் புன்னகை மட்டும் செய்த விதி, அகலமாய் சிரிக்க ஆரம்பிச்சுது.''

''விதி சிரிக்கிறதை நான் பார்த்ததே இல்லீங்க.''

''பழைய நாவல்கள் படிச்சுப் பாருங்க... ம்... கேட்கறீங்களா, தொடரும் போடவா?''

''ஐயோ... சொல்லுங்க.''

''எங்க அண்ணி ரொம்ப பாசமாய் நடந்துக்கிட்டாங்க. அண்ணன் புதுசா தொழில் தொடங்க கொஞ்சம் பணம் குறையுது, உன் சங்கிலியையும் வளையலையும் கொடு. அடகு வைச்சி பணத்தை போடறேன், ஆறு மாசம் கழிச்சி திருப்பிடலாம்னு கேட்டான். வாய் திறக்காமல் கழற்றிக் கொடுத்தேன். அவன் நகைகளை அடகு வைக்கல, வித்துட்டான்னு பின்னாலதான் எனக்குத் தெரிஞ்சுது. ஒரு வழியாய் என் படிப்பும் முடிஞ்சுது. எங்க அண்ணி மாற்றாந்தாயா நடக்க ஆரம்பிச்சிட்டா... எங்க அண்ணன் கண்டுக்கிறதே இல்லை. நானும் அவங்களை கண்டுக்கிற தில்லைன்னு தீர்மானிச்சேன். மதுரை இசைக்குழு ஒண்ணுல பாடகியா சேர்ந்தேன். வெளியூர் கச்சேரிக்கு இரண்டு நாள் தங்கிட்டு மூன்றாவது நாள் வீட்டுக்கு வந்தேன். ஒரு பூகம்பமே காத்திருந்துச்சு. அண்ணன் குடும்ப மானமே கப்பல் ஏறிட்டுதுன்னு வானத்துக்கும், பூமிக்குமா குதிச்சான்.



மாப்பிள்ளை தேவைன்னா எங்கிட்ட சொல்ல வேண்டியது தானே என்று அசிங்கமாய் கேட்டான். அதுக்கப்புறம் வீடே நரகமா மாறிப்போச்சு. எனக்கு அந்த வீட்டை விட்டு எப்ப வெளியே போகலாம்னு இருந்திச்சு. அதனால...''

''ஒரு சுபயோக சுப தினத்தில் வீட்டை விட்டு மெட்ராஸ் ஓடி வந்திட்டிங்க... அப்புறம்...''

''அப்புறம் என்ன... என் ஸ்கூல்மேட் விஜயா இந்த வீட்டை ஏற்பாடு பண்ணித் தந்தாள்.''

''மூன்று வேளைக்கு...?''

''காதிலிருந்த தங்கம் காணாம போயி இமிடேசன் வந்து உட்கார்ந்திருக்கு. கோரஸ் பாடி சாப்பிட முடியுமா சார்.''

''உங்க அண்ணன் தேடுவாரா...''

''தேட்றானோ, ஒழியட்டும் கழுதைன்னு விட்டுட் டானோ...'' - கொஞ்ச நேரம் மவுனம் நிலவியது. கவிதாவுக்கு ஒரு முக்கியமான உண்மையை மறைத்து விட்டோமே என்ற உறுத்தல் இருந்தது. சூரியன் காணாமல் போயிருந்தான்.

''பாஸ்கர் சார் கோரஸ் பாடறவங்களைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''நான் என்ன நினைக்கிறது. இந்த கனவுத் தொழிற் சாலையில குரூப் டான்ஸ் ஆட்றவங்களையும், கோரஸ் பாடறவங்களையும் ஒரே வரிசையில்தான் வச்சிருக்காங்க. சமூகமும் அப்படித்தான் நினைக்குது.''

''சமூகத்தை விட்டுத் தள்ளுங்க. நீங்க என்ன நினைக்கிறீங்க.''

''கவிஞர் நா.காமராசன் கருத்துதான், என்னோட கருத்தும்.''

''அப்படி என்ன சொல்லியிருக்கார்?''

''கலைவாணியின் கால்களுக்கு
சதங்கை கட்டி விட்டு
பூசாரியின் முன்னால்
கண்ணீர் சுமப்பவர்கள்
வீணையைத் தொட வந்து
விறகு சுமப்பவர்கள்
பாடல்களை
முத்தமிட வந்து
வெறும் முனகல்களின்
எச்சில் பட்டவர்கள்.''



''நூற்றுக்கு நூறு உண்மை சார். வண்ண வண்ண கனவுகளோட ஊரை விட்டு வந்தவங்க நிறையபேர் கோரஸ் பாடறாங்க. நான் கனவுகளை சுமந்துக்கிட்டு வரல்ல. கண்ணீரைச் சுமந்துகிட்டு வந்தேன். ஏதோ மனசளவில் நிம்மதியா இருக்கேன்.''

''கவிதா நீங்க நிச்சயமாய் பெரிய பாடகியா வரத்தான் போறீங்க.''

''அதுக்குள்ள செத்துப் போயிடுவேன் சார்''-என்றாள் சோகமாய்.

''ஏதாவது உள்ளுக்குள்ளே பெரிய வியாதி இருக்குதா...?'' - என்றான் சிரித்தபடி.

''பசியும் ஒரு வியாதிதானே சார்...?'' -என்று கவிதா கேட்ட கேள்வியில் பாஸ்கரின் சிரிப்பு உறைந்து போயிற்று.



முகத்தில் சிந்தனை படர்ந்தது. கண்கள் அவள் கண்களில் எதையோ தேடியது. குனிந்து சிரத்தையாய் மணலில் கோடு கிழித்தாள்.

''கவிதா...''

''ம்...''

''இந்த வினாடி முதல் நான் உங்கள் நண்பன். எந்த உதவி தேவைப்பட்டாலும் உரிமையோடு கேட்கலாம். நீங்க கேட்காவிட்டாலும் நான் செய்வேன். நான் தவறு செய்தால் 'டேய் பாஸ்கரா' என்று சட்டைக் காலர் பிடித்து உரிமையோடு நீங்கள் கண்டிக்கலாம்... சரிதானா?''

''ம்...'' - என்றாள் குறுஞ்சிரிப்புடன்.

''சிரிக்கும்படியா என்ன சொல்லிட்டேன்.''

''சட்டைக் காலர் பிடிச்சி திட்டினா எப்படி இருக்கும்னு கற்பனை பண்ணிப் பார்த்தேன், சிரிப்பு வந்திடுச்சி.''

''ஓஹ்... கொஞ்சம் விட்டா சட்டைக் காலரை பிடிச் சிடுவீங்க போலிருக்கே... இனி காலர் இல்லாத சட்டை போட வேண்டியதுதான்.''

- கவிதாவின் முகம் வெட்கத்தில் நிறம் மாறியது, அரைகுறை இருட்டில் தெரியவில்லை.

''கவிதா மீண்டும் ஏதாவது கற்பனையா...''

''இல்லை சார்... மணல்லதான் இருக்கேன்.''

''அப்படினா சரி... அங். உங்ககிட்ட சொல்லணும்னு நினைச்சேன். பேச்சு சுவாரஸ்யத்தில மறந்தே போயிட்டேன்.''

''என்னது சார்...?''

''என் பிரெண்ட் ஒருத்தர் புதுசா முத்தமிழ் இசைக் குழுன்னு ஆரம்பிச்சிருக்கார். அதுக்கு ஒரு இனிமையான பெண் குரலை தேடிக்கிட்டிருக்கார். நேத்து அவருக்கு போன் பண்ணி உங்களைப் பற்றிச் சொன்னேன். அழைச்சிட்டு வரச் சொன்னாரு. நாளைக்கு ஈவ்னிங் போகலாமா...?''

''ஓ... இசைக்குழுன்னா...?''

''சினிமா பாட்டு பாட்றவங்க இல்லை. பாரதியார், பாரதிதாசன் இப்படி பெரிய கவிஞர்கள் பாட்டுகளுக்கு புதுசா மெட்டமைச்சி பாட்றது, நாடோடிப் பாடல்கள், பழைய தமிழ்ப் பாடல்கள்னு தமிழ் பற்றோட செய்றாங்க. இந்தக் குழு சீக்கிரம் அரங்கேறும்.''

''நாளைக்கு கண்டிப்பா அழைச்சிட்டு போங்க சார். நான் எத்தனை மணிக்கு எங்கே சந்திக்கணும்னு சொல்லிடுங்க.''

''அஞ்சு மணிக்கு பனகல் பார்க் வந்திடுங்க. நான் நேரே அங்க வந்திட்றேன். அங்கயிருந்து நடக்கிற தூரம்தான்.''

''எனக்காக ரொம்ப சிரமப்படறீங்க.''

''இந்த விநாடி முதல் டையலாக்கை மறந்திட்டு பேசாதீங்க.''

''சார் மழை வரப் போகுது. என் மூக்கில ஒரு துளி விழுந்திடுச்சி''

- இருவரும் மணல் உதறி எழுந்தார்கள்.

## 6

கரிய மேகங்கள் கை கோர்த்து வானத்தை மறைத்திருந்தன. மேகச் சேற்றுக்குள் அந்தி சூரியன் தொலைந்து போயிருந்தான். பருவக் காற்று

ஜில்லிப்பாய் ஊர்வலம் வர-ஒரு பெரிய பங்களாவுக்குள் இருந்து சந்தோஷ முகங்களோடு வெளியே வந்தார்கள் பாஸ்கரும் கவிதாவும்.

''நான் தான் இசைக்குழுவோட பிரதான பாடகின்னு சொன்னதும் என்னால நம்பவே முடியல்ல. உங்க முகத்துக்காகத் தான் அவர் அப்படி சொல்லியிருப்பாருன்னு நினைக்கிறேன்''

''அவரு முகதாட்சண்யம் பார்க்கிறவரே இல்லை. உங்க குரல்தான் அவரை அப்படி சொல்ல வச்சிருக்குது. உங்க குரல் அவருக்கு பிடிக்கலேன்னு வச்சுக்குங்க. போயிட்டு வாங்க பாஸ்கர் சொல்லி விட்றேன்னு நம்மை அனுப்பிட்டு, பின்னாலேயே போன் போட்டு குரல் பிடிக்கலேன்னு ஒற்றை வரியில சொல்லிடுவாரு.'' - பாஸ்கரின் கண்கள் பஸ் ஸ்டாப்பைத் தேடின.

''கொஞ்ச தூரம் நடப்போமா...'' - என்றாள் சின்னக்குழந்தை குதூகலத்துடன்.

''ஓ...'' - என்றான் உற்சாகமாய். அதில் சந்தோஷம் தெரிந்தது.

நடப்பது என்பது தனி சுகம். அதுவும் மழை மேகம் சூழ்ந்த மண் வாசனை சுமந்த காற்று முகத்தை வருடிச் செல்ல

காற்றில் ஆடை படபடக்க கேசம் நெற்றியில் புரள நடந்து செல்வது இன்னும் சுகம். அந்தச் சுகத்தை மனதுக்குப் பிடித்தவருடன் பகிர்ந்து கொண்டால் ஆனந்தம். மனதுக்குப் பிடித்தவரே இளம் பெண்ணாகவும் இருந்து விட்டால் பேரானந்தம். மனதுக்கு இறக்கை முளைக்கும். அந்த நிலையில்தான் பாஸ்கர் இருந்தான். கவிதாவும் ஏறக்குறைய அதே நிலையில்தான் இருந்தாள்.

ரோட்டில் விர்றிட்டு சென்ற பஸ் ஒன்று அவர்களை நெருங்க வைத்திருந்தது. விரல்கள் எதேச்சையாய் தொட்டு விலகியது. காற்றில் பறந்த அவளுடைய கேச உதிரிகள் அவன் நெற்றி, மூக்கு உதடு என்று வருடி கிச்சு கிச்சு மூட்டியது. இருவரும் மவுனமாகவே நடந்தார்கள். எதோ கனவுலகில் நடப்பது போல இருவருக்குள்ளும் மிதப்புணர்வு இருந்தது.

''கவிதா''

''ம்'' - என்றாள் மெலிதாய்.

''கவித்தா''

''ம்'' - இந்தமுறை அவளுக்கு மட்டுமே கேட்டது.

''இந்த வானம்... மேகம்... காற்று... உனக்கு பிடிச்சிருக்கா?'' - அபத்தமாய் ஒரு கேள்வி கேட்டான். ஏதோ கேட்க நினைத்து தயக்கத்திலே பிறந்த கேள்வி இது.

பாஸ்கர் முகத்தை நேருக்கு நேர் பார்த்து, ''பிடிச் சிருக்கு'' என்றாள். பாஸ்கர் நடையை நிறுத்தி, கவிதாவின் முகத்தை இமைக்காமல் பார்த்தான்.

''பொய் சொல்லல. நீங்க கேட்ட மாதிரியே வானம், மேகம், காற்று எல்லாமே பிடிச்சிருக்கு.'' -என்றாள்



குறுஞ்சிரிப்புடன். சட்டென்று நான்கு கண்களும் உற்றுப் பார்த்தன. குபீரென்று சிரிப்பு பிறந்தது.

தங்களை நினைத்து, தங்களை மறந்து சிரித்தார்கள். விரையும் பஸ்கள், நடக்கும் ஜனங்கள், ரோட்டோர கடைகள் சகலமும் ஒரு நிமிடம் மறந்து போயிற்று. சிரிப்பு விடை பெற்றதும், வெட்கம் வந்தது. நடக்க ஆரம்பித் தார்கள்.

வானம் உற்சாகம் வந்தது போல் மழை சிதற ஆரம்பித்தது. இருவருக்கும் மழைக்கு ஒதுங்க வேண்டும் என்று தோன்றவில்லை. தொடர்ந்து நடந்தார்கள். மழை வேகம் காட்டியது. இருவரும் தெப்பலாய் நனைந்து போனார்கள். ஆடைகள் உடம்போடு ஒட்டிக் கொண்டது.

முகத்தில் வழிந்த தண்ணீரைத் துடைத்தபடி நடந்தார்கள். வாகனங்கள் தண்ணீர் சிதறிவிட்டுச் சென்றன. பாஸ்கரன் ஓரக் கண்ணால் கவிதாவைப் பார்த்தான். அழகாய், மிக அழகாய் தெரிந்தாள். அவன் தன்னைக் கவனிப்பது தெரிந்தும் தெரியாதது போல் நடந்தாள்.

வானம் அவசரமாய் தொடரும் போட்டது. கிழக்கே வானவில் காட்டியது. காற்று மீண்டும் குளிர் சுமந்து வந்தது. இருவருக்கும் குளிரியது.

ஆட்டோ ஒன்று மழை நீரைச் சிதறடித்துக் கொண்டு அவர்கள் அருகில் வந்து நின்றது. டிரைவர் தலையை வெளியே நீட்டி, ''சார் ஆட்டோ'' என்றான். பாஸ்கர், கவிதா முகம் பார்த்தான். அவள் தலையசைக்க இருவரும் ஆட்டோவில் ஏறினார்கள்.

ரோட்டோர பெட்டிக்கடையில் சிகரெட்டுக்கு நெருப்பு வைத்து விட்டு திரும்பியவன் கண்களில் அந்த

ஆட்டோவும், பாஸ்கரும், கவிதாவும் பட்டார்கள். அந்த விநாடியே அவன் முகத்தில் அதிர்ச்சி வந்து உட்கார்ந்தது. சிகரெட் உதட்டிலிருந்து நழுவி கீழே விழுந்தது. அவன் வாய் 'கவிதா... கவிதாவேதான்'' என்று முணுமுணுத்தது.

தற்செயலாய் ஆட்டோவுக்கு வெளியே எட்டிப் பார்த்த கவிதாவின் கண்களில் அவன் தெரிந்தான். அவசரமாய் முகம் நிறம் மாறியது. கண்களில் பயம் பிறந்தது. அவன் ஆட்டோவை நோக்கி வேகமாய் வந்தான். ஆட்டோ வேகம் எடுத்தது.

கவிதாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. திரும்பி பின்னால் பார்த்தாள். நடுரோட்டில் நின்று ஆட்டோவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந் தான் அந்த அவன்.

அந்தக் குளிரிலும் முகத்தில் முத்து முத்தாய் வியர்த்தது. மூச்சுத் திணறுவது போல் இருந்தது.

''என்ன கவிதா ஒரு மாதிரி ஆயிட்டீங்க. முகமெல்லாம் வியர்த்துப் போயிருக்குது.''

''ஒண்ணுமில்லை'' - என்றாள். குரல் தடுமாறியது. சிரிக்க முயன்றாள். முடியவில்லை.

''கவிதா புதன்கிழமை ரிகர்சல் மறந்திடாதீங்க.''

''ம்'' - என்றாள் சுரத்தில்லாமல். பிறகு இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

## 7

பாஸ்கர் தலை ஈரம் இன்னும் காயாமல் இருந்தது. மாடிப்படிகளை நோக்கி நடந்தவனை சகுந்தலா மாமி ஏதோ விஷ ஜந்துவைப் பார்ப்பது போல குரோதமாய்ப் பார்த்தாள். காலடி ஓசையில் நான்காவது முறையாக படித்துக் கொண்டிருந்த காலை தினசரியிலிருந்து கண்களை எடுத்தார் சேது மாமா.

''என்னப்பா பாஸ்கர்... மெட்ராஸ் மழை எல்லாம் உன் தலையிலதான் பெஞ்சுதா...?''

''என்ன அங்கிள் செய்றது... மழை பெய்த இடத்தில நான் நின்னுகிட்டிருந்தேன்.'' - சேது மாமா ஏதோ பெரிய நகைச்சுவையை கேட்டவர் போல சிரிக்க, பாஸ்கர் அவசரமாய் படியேறினான்.

''என்னடா இது, இங்க குளிக்கிறதுக்கு தண்ணி இல்லைன்னு ஸ்டுடியோவில குளிச்சிட்டு தலை துவட்டாம வந்துட்டியா?''

''அறுக்காதடா. நானே மழையில நனைஞ்சிட்டு எரிச்சலோட வந்திருக்கேன்.''

''பேண்ட்டையும், சர்ட்டையும் பார்த்தா தண்ணியா கொட்டுமே அந்த மழையில் நனைஞ்ச மாதிரிதான் தெரியுது. ஆனா முகத்தை பார்த்தா காதல் மழையில நனைஞ்ச மாதிரியில்ல தெரியுது... ஏய் பாஸ்கர் துண்டை எடுத்துட்டு எங்கே கிளம்பிட்டே...''

''கீழே போயி குளிச்சிட்டு வந்திட்றேன்.''

''அதுவும் நல்லதுதான். சூடா இருக்கிற மூளை கொஞ்சம் குளிரும்.''

-பத்தாவது நிமிடம் குளித்து விட்டு பாஸ்கரன் மேலே வந்தான்.

''பாஸ்கர் எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்.''

''எந்த உண்மை... சேது மாமாவுக்கும், சகுந்தலா மாமிக்கும் நடந்த மேரேஜ், லவ் மேரேஜ்ஜா இல்லை அரேன்ஞ்ட் மேரேஜாங்கிற உண்மைதானே...''

''பூசி மெழுகாதே, நேரே விஷயத்துக்கு வர்றேன். நேத்து நான் மாலதி கூட போனேன். நீ கடற்கரைக்கு போனே... உன்னை கடற்கரையில காத்திருக்கச் சொல்லிட்டு நான் வராம இருந்திட்டேன். இப்பிடி நான் ஏதாவது செய்தா காச்சு மூச்சுன்னு கத்திட்டு இரண்டு நாள் பேசாம இருப்பே. இந்த முறை வழக்கத்துக்கு விரோதமாக நடந்துகிட்டே... இயல்பா சிரிச்சி பேசின... டெய்லி அஞ்சு மணிக்கு என்னை வந்து பாக்கிற நீ இன்னிக்கு வரல்ல. ரிக்கார்டிங் தியேட்டருக்கு வந்து பார்த்தா அங்கேயும் நீ இல்ல. நாலு நாப்பதுக்கே கிளம்பி போயிட்டதா சொன்னாங்க. ராத்திரி மழையில நனைஞ்சி திரும்பி வந்திருக்கே. எங்கேடா போனே... உண்மைய சொல்லு... கடற்கரையில ஏதாவது கண்டதும் காதல் பிறந்திடுச்சா...'' - என்று சிகாமணி கேட்ட கேள்வி பாஸ்கருக்கு கொஞ்சம் மகிழ்ச்சியும், கொஞ்சம் எரிச்சலும் தந்தது.

''எதுக்கு இப்படி தத்துபித்துன்னு உளர்றே... கடற்கரைக்கு நீ வரல்ல. காத்திருந்துட்டு திரும்பினேன். கோபம் வரல. கோபப்படல. நாலு மணிக்கு என் பிரண்ட் ஒருத்தர் போன் பண்ணி வரச் சொன்னார். போயிட்டு வர்ற



வழியில மழையில நனைஞ்சிட்டேன். உன் மூளை என்ன டான்னா கடற்கரை, கண்டதும் காதல்னு ஏடா கூடமா கற்பனை பண்ண ஆரம்பிச்சிடுச்சி. நீ பேசாம பேனர் வரையிறத விட்டுட்டு சினிமாவுக்கு கதை எழுதலாம்.''

''சரி... உண்மை மெதுவா வெளிய வரட்டும். முதல்ல நான் தந்த அம்பது ரூபாய்ல ஆட்டோசார்ஜ் போக மீதி குடு.''

''மீதியா... என்ன விளையாட்றியா... ஆட்டோவுக்கே வெயிட்டிங் சார்ஜ் கேட்கிறான், மனுஷனுக்கு கிடையாதா... கடற்கரையில காத்து இருந்ததுக்கு நீதான் இன்னும் இரண்டு ரூபா முப்பது பைசா தர வேண்டியதிருக்கு.'' -என்று சொல்லிவிட்டு பாஸ்கர் நீளமாய் ஒ ந ஏப்பம் விட்டான். சிகாமணிக்கு சிரிப்பு வரவில்லை.

## 8

**சா**ந்த சொரூபியாக கண்விழித்த சூரியன் கோபக் காரனாகியிருந்தான். நீண்ட மர நிழல்கள் அடி மரத்தில் தஞ்சம் புகுந்திருந்தன. பாதை தவறிய ஆட்டுக் குட்டியைப் போல வானத்தில் ஒரே ஒரு துண்டு மேகம்.

ஸ்டூடியோ வாசல் தாண்டி தார் ரோட்டை தொட்ட விஜயராஜாவின் காரை பார்த்துக் கொண்டு நின்ற பாஸ்கருக்கு பசித்தது. காலையில் சாப்பிடாதது நினைவுக்கு வந்தது. கேண்டீனை நோக்கி நடந்தான். எதிரில் கோஷ்டி பாடகிகள் குழு வந்தது.

''குட்மார்னிங் சார்'', ''குட்மார்னிங் சார்.''

''குட்மார்னிங்...'', ''குட்மார்னிங்'' என்று உதடுகள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கண்கள் கவிதாவைத் தேடி ஏமாந்தது.

''என்ன துடுக்கு... கவிதா வரலியா...?''

''சின்ன குழந்தை மாதிரி மழையில நனைஞ்சிட்டு ஜுரம்னு கண்ணை மூடி படுத்திருக்கா'' என்று சொல்லி விட்டு விஜயா நடக்க அந்த பெண்கள் கூட்டம் பாஸ்கரை கடந்தது. ஜுரமா... என் கவிதாவுக்கு ஜுரமா... மழையில் நனைய வைத்தது என் தவறுதானே. அந்த பூமேனி ஜுரத்தை தாங்கிக் கொள்ளுமா... டாக்டரிடம் காட்டியிருப்பாளா... மருந்து ஏதாவது சாப்பிட்டிருப்பாளா... இல்லை கவனிக்க ஆள் இன்றி படுத்தேதான் இருப்பாளா? காண்டீனை நோக்கி நடந்த கால்கள் திரும்பி ஸ்டுடியோ வாசலை நோக்கிச் சென்றது.

அடுத்த முப்பதாவது நிமிடம் கால்களை சேறாக்கிக் கொண்டு அந்த வீட்டு வாசலில் போய் நின்றான் பாஸ்கர். அந்த வீட்டின் கதவு பாதி திறந்திருந்தது. பாயில் கவிதா ஐந்து வயதுக் குழந்தையாய் சுருண்டு படுத்திருந்தாள். மனதுக்குள் கவலை பந்தாய் எழுந்தது.

''கவிதா'' என்றான் மெலிதாய். கொஞ்சமும் அசையாமல் முதுகு காட்டி படுத்திருந்தாள்.

''கவிதா'' என்றான் சற்று குரல் உயர்த்தி. கவிதா அசையவில்லை. கதவு எதிர்பாராமல் அகலமாய் திறந்தது. ஒரு கிழவி தலையை நீட்டினாள். கண் சுருக்கி கேள்வி கேட்டாள்.

''யார் வேணும்...?''



''என் பேரு பாஸ்கர். கவிதாவுக்கு சுகமில்லைன்னு விஜயா சொன்னாங்க. அதான் பார்த்துட்டு போகலாம்னு...'' என்று இழுத்தான். அத்துணை விளக்கமாய் சொல்லியிருக்க வேண்டாமோ என்று மனதுக்குள் தயக்கம் வந்தது. அந்த கிழவி வழி விடுவதாக இல்லை. பாஸ்ககரை ஒரு முறை மேலும் கீழும் பார்த்தாள்.

''அப்படியோ கொஞ்சம் நில்லுப்பா'' என்று சொல்லிவிட்டு கிழவி விடுவிடுவென்று உள்ளே போனாள். பாஸ்கருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் வெளியே நிற்கச் சொன்னாள். குழப்பமாய் இருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தான். கையில் ஒரு பிளாஸ்டிக் வாளியுடன் கிழவி வெளியே வந்தாள்.

''கால்ல ஊத்திக்கப்பா'' அந்த வினாடிதான் கவனித் தான்-காலில் ஒட்டியிருந்த சேற்றை. தண்ணீர் ஊற்றி கழுவி விட்டு உள்ளே நுழைந்தான். கவிதா கண் விழித்திருந்தாள்.

''வாங்க பாஸ்கர் சார்'' முகத்தில் சந்தோஷம் கலந்த வியப்பு. தண்ணீர் இல்லாத வெற்றிலை கொடி போல தெரிந்தாள்.

''இருந்த ஒரே பாயில நான் படுத்துட்டேன். கொடியில கிடக்கிற துண்டை எடுத்து விரிச்சி உட்காருங்க சார்.''

துண்டை விரித்து பாயின் அருகில் அமர்ந்தான்.

''ஒரே நாள் ஜுரத்தில் இப்படி ஆயிட்டீங்க...''

''என் உடம்பு பூஞ்சை உடம்பு சார். எனக்கு ஜுரம்னு விஜயா சொன்னாளா...''

''சொன்னது விஜயாதான். பதறிபோயிட்டேன். சும்மா இருந்த உங்களை இசைக்குழு அது இதுன்னு அழைச்சிட்டுப்

போயி மழையில நனைய வைச்சதே நான்தான். நனைஞ்சதால ஜுரம் வந்திடுச்சி. கேள்விப்பட்ட உடனே இங்கே வந்திட்டேன்.''

''ஐயோ... விஜயராஜா உங்களைத் தேடுவாரே''

''வர்ற வழியிலதான் அந்த நினைப்பே வந்தது. சரி விடுங்க உங்களுக்கு ஜுரம் எப்படி இருக்கு?'' என்று கேட்டபடி எதேச்சையாக அவள் நெற்றியைத் தொடப் போன பாஸ்கரின் கை தயக்கமாய் நின்றது.

''சும்மா தொடுங்க சார்...ஒண்ணும் ஷாக் அடிக்காது.''

தொட்டான். நெருப்பாய் சுட்டது. மனதுக்குள் ஜில்லிப்பாய் குளிர் வீசியது.

''இப்பிடி நெருப்பாய் கொதிக்குது. ஆஸ்பத்திரிக்கு போனீங்களா?''

''ம்கூம்''

''போக வேண்டியதுதானே...''

''முப்பது காசுதான் கஜானாவில் இருக்குது. அதை வைச்சுகிட்டு எங்கே சார் போக முடியும். விஜயா வரட்டும்னு படுத்திருக்கேன்''

''விஜயா வர்றதாவது, நீங்க போறதாவது... மெட்ராசில வந்து சாகணுங்கிற முடிவோட மதுரையில இருந்து வந்தீங்களா... சுவர் இருந்தாதான் சித்திரம் எழுத முடியும். நீங்க எழுந்திருங்க ஒரு ஆட்டோ பிடிச்சி ஆஸ்பத்திரி போயிட்டு வந்திடலாம்.''

''நீங்க எதுக்காக சிரமப்பட்றீங்க?''

''இதில சிரமம் இல்லை. மனிதாபிமானம். ம்... எழுந்திருங்க'' எழுந்து அமர்ந்தாள் கவிதா.



''சுடு கஞ்சிகுடிச்சிட்டு போ தாயி'' கிழவி ஒரு சின்ன பாத்திரத்தை வைத்தாள். கவிதா மறுக்க, மறுக்க சுடு கஞ்சியை ஆற்றி கொடுத்து அவளை குடிக்க வைத்தான் பாஸ்கர்.

கிழவியிடம் சொல்லி விட்டு புறப்பட்டு, ஆட்டோ பிடித்து ஆஸ்பத்திரி சென்று- மெடிக்கலில் டானிக் மாத்திரை களை வாங்கி- குளுகோஸ், ஹார்லிக்ஸ் ஆரஞ்ச் என்று கவிதா தடுத்தும் வாங்கிக் கொண்டு ஆட்டோவில் வீட்டு வாசலில் இறக்கி விட்டு விட்டு போனான் பாஸ்கர். கவிதாவுக்குள் கனவு பிறந்து பாஸ்கர் சிரித்தான்.

**பா**ஸ்கர் படியேறும் போதே வாசலில் நின்று கேலிச்சிரிப்புடன் வரவேற்றான் சிகாமணி.

''வாங்க சார் வாங்க. இந்த முறை நீங்க தப்ப முடியாது. உண்மை சொல்லாம''

''முதல்ல வழியை விடுடா''

''உள்ளே வந்து சொல்றேங்கிறியா சரி வா''

''என்னடா உனக்கு சொல்லணும்''

''மத்தியானம் பனிரெண்டு மணிக்கு விஜயராஜா கிட்ட கூட சொல்லாம எங்கே போனே...?''

''எங்க பெரியப்பா ஒருத்தர் கிராமத்திலே இருந்து திடீர்னு வந்திருந்தாரு. அவரை...''

''இந்த கதையை விஜயராஜா கிட்ட சொல்லு. என்கிட்ட உண்மையைச் சொல்லு.''

''ம்... கவிதான்னு ஒரு பொண்ணு. கோஷ்டி கானம் பாட வரும். தனியா இருக்குது. உதவி செய்ய யாரும்

இல்லை. அதுக்கு ஜுரம், போய் பார்த்துட்டு ஆஸ்பத்திரிக்கு அழைச்சி போயிட்டு வந்தேன். போதுமா...?''

''போதும். இப்போதைக்கு இது போதும். ஐயா பார்க்கப் போனாராம். இதே ஒரு கிழவிக்கு ஜுரம்னா பாக்க போவியாடா... இந்த காதல் பிறந்து எத்தனை நாள்டா ஆச்சி...?''

''காதலாவது கத்தரிக்காயாவது... மஞ்சள் காமாலை காரன் கண்ணுக்கு மல்லிகை கூட மஞ்சளாகத்தான் தெரியும். நீ அந்த ரகம்.''

''காதலிக்கறவங்க பொதுவா உண்மை சொல்ற தில்லை. மணி ஓசை கேட்குது. நிச்சயம் யானை வரத்தான் செய்யும். யானை வந்த பிறகு உன்னால மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. அதுசரி... கிராமத்தில் உனக்காகவே காத்திருக்கிற உன் மாமன் மகளை நினைச்சுப் பாத்தியாடா''

''என் இடத்தில நீ இருந்தாத்தான் உனக்கு அது புரியும். சுதாவை என் தங்கச்சியா நினைச்சிகிட்டிருக்கேன்னு பொய் சொல்ல விரும்பல. சுதா படிச்சிருக்கிறது கொஞ்சம். இசையோட அரிச்சுவடியே அவளுக்குத் தெரியாது. அவளிடம் இசையைப் பற்றியோ, அரசியலைப் பற்றியோ பேச முடியுமா... வெறுமனே சமைச்சு போட்ற மனைவி எனக்கு வேண்டாம். என் அம்மாவுக்கு நான் சுதாவை கட்டிக்கணும்னு கொள்ளை ஆசை. என் அம்மாவோட ஆசைக்காக நான் கனவு கண்டு வைச்சிருக்கிற வாழ்க்கையை இழக்க என் மனசு சம்மதிக்காது.''

''அப்பாவையும் அம்மாவையும் சின்ன வயசில இழந்துட்டு, நீயே தஞ்சம்னு உன் வீட்டிலேயே வளர்ற சுதா என்னடா செய்வா?''



''கொஞ்சம் படிச்சவன் மாதிரி பேசு. சுதாவுக்குன்னு ஒருத்தன் நிச்சயம் பிறந்திருப்பான். அவனுக்கும் சுதாவுக்கும் ஜாம் ஜாம்னு நானே முன்னால நின்னு கல்யாணத்தை நடத்தி வைப்பேன். சீர், செனத்தி எந்த குறையும் வைக்க மாட்டேன்''

''ம்... கதை ட்ரேக் மாறி போகுது. இடையில வில்லன் வந்து ஆக்சிடெண்ட் ஆகாம இருந்தா சரி.''

''என் கதையில நீ யாருடா...?''

''முடிவில 'சுபம்' போட்றதுக்கு என்ன வேஷம் போடவும் தயார். மணி நாலாகப் போகுது. சகுந்தலா மாமி துயில் எழும்புறதுக்குள்ள இரண்டாவது தடவை குளிச்சிட்டு வந்திட்றேன்.'' துண்டை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு கீழே இறங்கினான் சிகாமணி.

பாஸ்கர் பசி உணர்ந்தான். காலையிலும், மதியமும் ஒன்றுமே சாப்பிடாதது நினைவுக்கு வந்தது. ஏன் சாப்பிட மறந்து போய்விட்டது. எது நான்கு மணி நேரம் பசி மறக்கச் செய்தது. கவிதாவின் நெருக்கமா... இல்லை. அவள் மீது கொண்டிருக்கும் காதல் உணர்வா... நான் கவிதாவை காதலிக்கத் தொடங்கிவிட்டேனா? அப்படித்தான் தோன்று கிறது. ஆனால் கவிதா... அவள் என்னைக் காதலிக்கிறாளா.'' கீழே சகுந்தலா மாமி கத்துவது கேட்டது.

''ஒரு நாளைக்கு பத்து தடவை குளிக்கிறதுக்கு இங்கே என்ன அருவியா கொட்டுது. சதா எருமை மாடு மாதிரி தண்ணிக்குள்ள கிடக்கிறதுக்கு இது கிராமம் இல்லை. மெட்ராஸ் பட்டணம்ப்பா. தண்ணிக்கு கூட காசுதான். இந்த சகுந்தலா பிரியதர்சினி காம்பவுண்டுக்குள்ள இருக்கிற எவனுக்காவது பத்து தடவை குளிக்கணும்னு ஆசை

வந்திச்சி, பெட்டி சட்டியை தூக்கிக்கிட்டு ரயிலேறிடு, சொல்லிப்புட்டேன். நாங்க வாடகை கொடுத்துட்டுதான் இருக்கோம். ஒசியில இல்லைன்னு எவளோ ஒருத்தி சொன்னாளாம். பெரிய வாடகை. பிசாத்து காசு. நான் எல்லா நேரமும் மனுஷியா இருக்க மாட்டேன். ஏடாகூடமா ஏதாவது நடந்திச்சி, பெட்டி சட்டியை துக்கிட்டுப் போயி கூவத்துல கடாசிடுவேன். சொல்லிப் புட்டேன்.''

-சகுந்தலா மாமியின் குரலை தொடர்ந்து எதோ பாத்திரம் உருளும் சத்தமும் படிகளில் யாரோ ஓடி வரும் சத்தமும் கேட்டது.

மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்க சிகாமணி வந்தான். இடுப்பில் துண்டும், கையில் லுங்கியும் இருந்தது. உடம்பிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. காதோரம் சோப்பு நுரை. பாஸ்கர் வயிற்றின் பசி மறந்து சிரித்தான்.

## ௯

சரசுவதி கலையரங்கம் கொஞ்சம் கொஞ்சமாக நிரம்ப ஆரம்பித்தது. பாஸ்கரனும், சிகாமணியும் முதல் வரிசையில் இருந்தார்கள். மேடையில் முத்தமிழ் இசைக் குழு தன் ஆரம்ப கட்ட வேலைகளை செய்து கொண் டிருந்தது. மேடையிலிருந்த கவிதா இறங்கி நேரே பாஸ்கரனிடம் வந்தாள்.

''என்ன கவிதா இறங்கி வந்துட்டே?''

''எனக்கு தனிமைப்பட்ட மாதிரி இருக்குது. நீங்களும் மேடைக்கு வாங்களேன்.''



''நீ பாடறதை ஒரு ரசிகனா இருந்து ரசிக்கத்தான் நான் ஆசைப்பட்டேன். போ... தைரியா பாடு'' -ஒரு முறை பாஸ்ககர் கண்களை நேர்ப்பார்வை பார்த்து விட்டு மேடையை நோக்கி நடந்தாள்.

''என்ன மச்சி உங்க ஆளு இந்தமுறை முறைச்சிட்டு போவுது'' - பாஸ்கர் திரும்பி முறைத்தான்.

''அட நீயும் முறைக்கிறியா... காதல்னா முறைக்கணும் போல. மாலதி என்கிட்ட சொல்லவே இல்லியே...''

''பேசாம இருடா. நிகழ்ச்சி ஆரம்பிச்சிட்டாங்க.'' விநாயகர் துதியில் ஆரம்பித்து நிகழ்ச்சி தொடங்கியது. வரிசையாய் வந்த பாடகர்கள் நாடோடி பாடல்களை பாடிச் செல்ல கூட்டம் அமைதியாய் இருந்தது.

போர்த்திய புடவைத்தலைப்புடன் கவிதா மைக் முன் வர பாஸ்கர் நிமிர்ந்து உட்கார்ந்தான். கவிதா பாடத் தொடங்கினாள்.

கூட்டம் மெய் மறந்து அமர்ந்திருந்தது. பாடி முடித்ததும் கரகோஷம் அரங்கத்தை அதிர வைத்தது. ''ஒன்ஸ் மோர்... ஒன்ஸ் மோர்'' என்று கூட்டம் ஆர்ப்பரித்தது.

இசைக்குழு தலைவர் கவிதாவை திரும்பவும் பாடச் சொல்ல கவிதா மீண்டும் அதே பாடலைப் பாடினாள். கூட்டம் மீண்டும் உற்சாகம் காட்டியது. காமிரா கண்கள் கவிதாவை நோக்கி கண்ணடித்தன. பாஸ்கருக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. பெருமையாய் திரும்பி சிகாமணியை பார்த்தான்.

அதே நேரம் நீல நிற ஜீன்ஸும், கறுப்பு நிறத்தில் தொள தொள பனியனும் அணிந்த கறுப்பு இளைஞன்

ஒருவன் அரங்கத்துக்குள் நுழைந்தான். அவன் பார்வை கவிதாவை குறி வைத்திருந்தது.

அவன் உதடுகளும், கண்களும் நெருப்பைச் சுமந்திருந்தன. கடைசி வரிசை இருக்கை ஒன்றில் அமர்ந் தான். பக்கத்து சீட்காரர் முகம் சுளிப்பதை பொருட் படுத்தாமல் சிகரெட்டை வேகமாய் புகையாக்கினான்.

அவனுடைய முக பாவம் இசையை ரசிக்கும் விதத்திலோ, பாடலின் வரிகளில் ஆழ்ந்து போய் விட்ட நிலையிலோ இல்லை. எதையோ பறி கொடுத்துவிட்ட எரிச்சலில் இருந்தது அந்த முகம்.

நிகழ்ச்சி முடியும் வரை அவன் பார்வை கவிதாவை தொட்டுக் கொண்டேஇருந்தது.

அடுத்த அறுபதாவது நிமிடம் நிகழ்ச்சி நிறைவுற்றது. முகத்தில் மகிழ்ச்சி பரவ மேடையிலிருந்து இறங்கினாள் கவிதா.

கூட்டம் கவிதாவை சூழ்ந்து கொண்டது. வியந்தது-பாராட்டியது. சந்தோஷத்தில் திணறிப் போனாள். ஒரு கை துண்டு காகிதம் நீட்டியது. வாங்கிக் கொண்டாள். கூட்டம் விலக துண்டு காகிதம் பிரித்தாள். அதிர்ந்தாள்.

'மதுரையில் நின்று போன கல்யாணத்தை மெட்ராசில் நடத்த திட்டமா... யார் அந்த இளிச்சவாயன்...?'' - என்றது துண்டு காகிதம். பதட்டமாய் வாசல் பார்த்தாள். நீல ஜீன்ஸ், கருப்பு பனியன் இளைஞனின் முதுகு தெரிந்தது. பாஸ்கர் புன்னகையுடன் கவிதாவை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவசரமாய் கையிலிருந்த துண்டுக் காகிதத்தை துண்டு துண்டாய் கிழித்து தரையில் போட்டாள்.



''என்ன கவிதா, சின்ன குழந்தை மாதிரி பேப்பர் கிழிச்சி விளையாட்றீங்க... என்ன பேப்பர் அது...?''

''ஒரு ரசிகர் 'மாறுகோ மாறுகோ பாடு'ன்னு சீட்டு எழுதிக் குடுத்திருக்காரு.''-சட்டென்று பொய் சொன்னாள். கண்கள் ஒத்துழைக்க மறுக்க தலை குனிந்தாள். முகம் அவசரமாய் வியர்த்தது.

## 10

மரங்கள் தலையசைத்து காற்று வீசியது. சூரியன் மஞ்சளுக்கு மாறி இருந்தான். மேக விளிம்புகள் தங்கச் சரிகை கட்டிக் கொண்டன. கவிதா புல்புடுங்கி காத்திருந்தாள்.

பாஸ்கர் கையில் இரண்டு வார இதழ்களுடன் வந்தான். அவன் முகத்தில் நிறைய சந்தோஷம்.

''வாங்க... உட்காருங்க'' - சற்று தள்ளி அமர்ந்தாள்.

''விஜயா வந்து சொன்னா. பாஸ்கர் சார் உன்னை ஈவ்னிங் பனகல் பார்க்குக்கு வரச் சொன்னார்னு. என்ன திடீர்னு?''

''ஒரு குட் நியூஸ், உங்களிடம் நேர்ல சொல்லணும்னு மனசுக்குள்ள ஒரு ஆசை.''

''என்ன சார் குட் நியூஸ்?''

''நீங்க ஊகம் பண்ணி சொல்லுங்க பார்ப்போம்.''

''சார் உங்களுக்கு திருமணம் நிச்சயம் ஆயிடுச்சி. எப்படி சரிதானா?''

''நீங்க ஊகமே பண்ண வேண்டாம். நானே சொல்லிட்றேன். உங்க குரலை பாராட்டி ஆனந்த விகடனிலும் தேவியிலும் செய்தி வந்திருக்குது. தேவியில உங்க போட்டோவையும் போட்டு விட்டிருக்காங்க.'' - தேவி இதழை விரித்து அவள் முன் நீட்டினான். வாய் பிளந்து, நாக்கு, முன் பல்காட்டி மைக்கை காதலாய் பார்த்துக் கொண்டிருந்தாள் கவிதா. அதில் அழகு தெரிந்தது.

''போட்டோ யார் கொடுத்தது?''

''நான் தான் கொடுத்தேன்''-என்றான் பெருமிதமாய். பாஸ்கருக்கு ஒரு முத்தம் கொடுக்கலாம் போல் இருந்தது கவிதாவுக்கு. நினைப்பே வெட்கம் தந்தது. குனிந்து தரை கிளறினாள். நிமிர்ந்து பாஸ்கரை நோக்கினாள். அந்தப் பார்வையில் காதல் இருந்தது.

''கொஞ்ச நாளா மனசில இருக்குது. அதை இன்னிக்கு சொல்லிட்றேன். என்னை நீங்கன்னு நீங்க கூப்பிடக்கூடாது. நீதான் சரியா...''

''ஓ.கே. நானும் என் மனசில இருக்கிறதை சொல்லிட்றேன். ஐ லவ் யூ.''

''நானுந்தான்''-என்றாள் கவிதா. இருவரும் பேசவில்லை. இருவர் கண்களும் ஒன்றை ஒன்று விழுங்க பெரு முயற்சி செய்தன.

அவள் கையை மெல்லத் தொட்டான். எந்தவித எதிர்ப்பும் இல்லை. கையைப் பிடித்து பூப் போல தூக்கி விரல்களில் முத்தமிட்டான். அவன் முத்தமிட்ட இடத்தை கண் அசையாமல் பார்த்தாள். அவன் உதடு தொட்ட இடத்தில் தன் உதடு பதித்தாள். அவன் சிலிர்த்துப் போனான்.

''கவிதா நீங்க...''



''நீங்க இல்ல நீ.''

''கவிதா நீ ரொம்ப அழகா இருக்கே.'' - என்றான் புதிதாய் பார்ப்பவன் போல். சிரித்தாள் கவிதா புது மலராய்.

''கவி''

''ம்.''

''கவி''

''ம்...''

''பேசமாட்டியா...?''

''என்ன பேசறது.''

''எதாவது...''

''எதாவதுன்னா...?''- இந்தக் கேள்விக்கு பாஸ்கரால் பதில் சொல்ல முடியவில்லை. கண்மூடி யோசித்தான்.

''சினிமாவுக்கு போகலாமா...''

''சினிமா... ம்...போவோம்.''-எழுந்து கொண்டார்கள். இருவர் கையும் கோர்த்துக் கொண்டது.

சினிமா தியேட்டர் முன் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது.

இருபதடி உயரத்தில் வாயில் சுருட்டுடன் நிற்கும் கமல். வரவேற்கும் ரசிகர் மன்ற பேனர்கள்.

''கவிதா நில்லு. ஒரு நிமிஷத்தில டிக்கெட் எடுத்துட்டு வர்றேன்.''

- பாஸ்கர் டிக்கெட் கவுண்டரை நோக்கி நடந்தான். கவிதா கூட்டத்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். அவள் பார்வை சற்று தள்ளியிருந்த டீக்கடையைத் தொட்டது. அதிர்ந்தாள். அவசரமாய் வியர்த்தாள்.

62948

டீக்கடையில் வாயில் புகையும் சிகரெட்டுடன் நின்று கொண்டிருந்தான் கறுப்பு பனியன் அணிந்திருந்த இளைஞன். அவன் பார்வை யதேச்சையாய் கவிதா நின்றிருந்த பக்கம் திரும்ப இருவர் பார்வையும் மோதிக் கொண்டது.

இளைஞன் கண்களில் நெருப்பு. வாயிலிருந்த சிகரெட்டை உதறி விட்டு, கவிதாவை குறி வைத்து நடந்தான். கவிதா அவசர கதியில் கூட்டத்துக்குள் கலந்தாள்.

கையில் இரண்டு டிக்கெட்டுடன் உற்சாகமாய் திரும்பி வந்த பாஸ்கர் திகைத்தான். கவிதாவைக் காணவில்லை. 'எங்கே போயிருப்பாள்' பதட்டமாய் நான்கு பக்கமும் தேடினான். கவிதாவை காணவே இல்லை.

**பா**ஸ்கர் உம்மென்றிருந்தான். முகத்தில் கோபம் இருந்தது. கண்கள் தூரத்து அலைகளை சந்தித்துக் கொண்டிருந்தது.

''எதிரில் கவிதா இருந்தாள். அவள் தலை கவிழ்ந் திருந்தது. விரல்கள் கடற்கரை மணலில் எதையோ தேடிக் கொண்டிருந்தது.

''பாஸ்கர் கோபமா...?'' - இரண்டாவது முறையாய் கேட்டாள்.

''பின்னே... இருக்காதா... சினிமாவுக்கு போகலாம்னு கேட்டதுக்கு சரின்னு தலையாட்டினே. டிக்கெட் எடுத்திட்டு வரவான்னு கேட்டதுக்கும் அதே தலையாட்டல். டிக்கெட் வாங்கிட்டு வந்து பார்த்தா உன்னை காணல. கோபம் வருமா, வராதா நீயே சொல்லு.''

''சாரி பாஸ்கர்.''

''உன் சாரியை கொண்டு கடல்ல போடு.''



''இந்த சாரியையா?'' - தன் புடவைத் தலைப்பைக் காட்டினாள். பாஸ்கருக்கு சிரிப்பு வந்தது.

''ஏன் கவிதா என் கிட்ட சொல்லாம வந்திட்டே... என் கூட படம் பார்க்க உனக்கு மனசில்லையா?''

''சே... சே...''

''பிறகு எதுக்கு என்னை அம்போன்னு விட்டுட்டு ஓடி வந்துட்டே...''

-கவிதா மவுனமாய் இருந்தாள்.

''சொல்றதுக்கு இஷ்டம் இல்லைன்னா சொல்ல வேண்டாம். நான் நிச்சயம் வற்புறுத்த மாட்டேன்.''

''சொல்வேன். கண்டிப்பா சொல்வேன். இன்னிக்கு இல்லை. இன்னொரு நாள்.'' -பொங்கிய கண்ணீரை அவசரமாய் மறைத்தாள்.

## 11

**அ**ன்று விடுமுறை நாள். சிகாமணியும், பாஸ்கரும் கொஞ்சம் அதிகமாய் அலங்கரித்திருந்தார்கள். படுக்கைகள் மட்டும் எடுப்பாரின்றி அலங்கோலமாய் கிடந்தன. பாஸ்கர் பெட்டியை குடைந்து கொண்டிருந்தான். ஒரு முறைக்கு இரு முறை கண்ணாடி பார்த்து திருப்தி அடைந்தவனாய் திரும்பிய சிகாமணி. பாஸ்கரை பார்த்ததும் எரிச்சல் அடைந்தான்.

''டேய் பாஸ்கரா, மணி ஒன்பதாகப் போகுது. நீ வர்றியா இல்லை நான் மட்டும் போகவா?''

''போ. ஒழி'' - என்று சொல்லி விட்டு பெட்டியிலேயே கவனமாய் இருந்தான்.

கோபமாய் முறைத்து விட்டு, வேகமாய் படிகளில் இறங்கிய சிகாமணி, அதே வேகத்தில் மேலே வந்தான்.

''பா... பாஸ்கர்... கீ... கீழே...''

''கீழே என்னடா...?'' - சன்னல் வழியே எட்டிப் பார்த்தான். வாசலில் ஆட்டோ ஒன்று நின்றது. அதைத் தொட்டுக் கொண்டு ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரது வலது கை மீசையைத் தடவியது. அவர் பார்வையில் கோபம் தெரிந்தது.

சிகாமணி முகம் வேப்பெண்ணெய் குடித்தது போல் மாறிப் போனது. கண்களில் டன் கணக்காய் பயம். உடம்பு மெலிதாய் உதறத் தொடங்கியிருந்தது.

''யாருடா அது?''

''மாலதி அப்பா.''

''மாலதி அப்பாவா... அவரோட மீசையும், அவர் நிக்கிற தோரணையும் கசாப்பு கடை வைச்சிருக்கிறவர் மாதிரி தோணுது. இங்க எதுக்காக வந்திருக்கார்...?''

''நானும் மாலதியும் காதலிக்கிறது இவருக்கு எப்படியோ தெரிஞ்சி போச்சு. மாலதியை வீட்டை விட்டு வெளியே போகக் கூடாதுன்னு சொல்லிட்டாராம். அந்த பயல் இருக்கிற இடத்தைச் சொல்லு. இரண்டு தட்டு தட்டி வைக்கணும்னு கேட்டாராம். இவ தெரியாதுன்னு சொல்லிட்டாளாம். இன்னிக்கி மனசு மாறி காட்டிக் கொடுத்துட்டாளோ என்னவோ தெரியல.''



''அவரு வந்து நிக்கற தோரணையைப் பார்த்தா, உன்னை ஒரு காலையாவது கையையாவது உடைக்காம போக மாட்டார்ன்னு நினைக்கிறேன்.''

''அடப்பாவி. நல்ல வார்த்தை சொல்லுடா. நான் உன் ப்ரண்டுடா. வள்ளுவர் கூட உடுக்கை கிடுக்கைன்னு எதோ நிறைய நட்பு பற்றி சொல்லிட்டு போயிருக்காருடா. பெரிய மனுஷன் பேச்சை கடைபிடிடா. படுவா ராஸ்கல், காப்பாத்துடா!'' அழமாட்டாத குறையாக கெஞ்சினான் சிகாமணி.

''சரி, வா கீழே போவோம்.''

''ஏன்... பிடிச்சி அந்த தடியன்கிட்ட குடுக்கப் போறியா...?''

''வாடா சமாளிப்போம்.'' - இருவரும் கீழே இறங்கி வந்தார்கள்.

சேது மாமாவையும், சகுந்தலா மாமியையும் காண வில்லை. வாசலை கடக்க அவசர நடை நடந்தார்கள். வாசலை அடைப்பது போல குறுக்கே வந்து நின்றார் மாலதி அப்பா. மீசையை ஒரு கையால் தடவிக் கொண்டே இருவரையும் உற்றுப் பார்த்தார். அவசரமாய் சிகாமணி, பாஸ்கரின் முதுகுக்குப் பின்னால் போனான்.

''தம்பி கொஞ்சம் நில்லுங்க சிகாமணின்னு ஒரு பய இந்த காம்பவுண்ட்ல இருக்கானாம். அவனை நான் அவசரமா பார்க்கணும்.''

''எதுக்குங்க...?''

''அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கிறதுக்குத் தான். எங்கே இருக்கான்...?''

''உங்களுக்கு சிகாமணிதானே வேணும்'' - என்று சொல்லியபடி சிகாமணி கையை பாஸ்கர் பிடிக்க, சிகாமணி பார்வை 'காட்டிக் கொடுத்து விடாதே' என்று கெஞ்சியது.

''சாருக்கு சிகாமணிதான வேணும். சிகாமணியை பார்க்கணும்னா இந்த இடத்திலேயே அசையாம நில்லுங்க அஞ்சி நிமிஷத்துக்குள்ள வெளியே வருவான். பையன் கறுப்பு. கொஞ்சம் பல் எடுப்பு. ஒரே அமுக்கா அமுக்கிடலாம். வரட்டுமா?''

''போயிட்டு வாங்க தம்பி.''

''சரியான மாங்காய் மடையனா இருப்பான் போலிருக்கு.''- சிகாமணி மெல்லிய குரலில் பாஸ்கரனிடம் சொல்ல, அது மாலதி அப்பாவின் காதில் விழ கோபமாய் திரும்பினார்.

''யாரைச் சொல்றே...?''

''அந்த சிகாமணியைச் சொல்றேன்.''

''ஓ... அதுதான பார்த்தேன்.'' -என்றார் சந்தோஷச் சிரிப்புடன். இருவரும் வேகமாய் நகர்ந்தார்கள்.

''பாஸ்கரா, நீர்காக்கா எதாவது ஏடாகூடமாச் சொல்லி அந்த தடியன் நம்மை தேடி வர்றதுக்குள்ள நாம தப்பிச்சாகணும்.''

''நான் எதுக்குடா தப்பிச்சாகணும். நீ தப்பிச்சாகணும். காதல் விரட்டுதய்யான்னு பாட்டு பாடிகிட்டே ஓடு. எனக்கென்ன வந்தது. உன்பாடு அந்த மீசைகாரர் பாடு...'' -என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர்களை உரசுவது போல ஒரு மாருதி கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு கோட் சூட் அணிந்த மனிதர் இறங்கினார்.



''நீங்க தான் பாஸ்கர்.''-ஆமென்று தலையசைத்தான்.

''வணக்கம். உங்களை தேடித்தான் வந்தேன். வாங்களேன். பேசிக்கிட்டே போகலாம்.''

- பாஸ்கர் வாய் திறப்பதற்குள் சிகாமணி அவசர அவசரமாய் வண்டியில் ஏறிவிட்டான். சற்று யோசனை யுடன் பாஸ்கரும் ஏறினான். சிகாமணியிடமிருந்து நிம்மதி பெருமூச்சு வந்தது. வண்டி மெல்ல நகர்ந்தது.

''சார் நீங்க...''

''நீங்க யாரு... எதுக்காக என்னை தேடி வந்திங்கன்னு கேட்க போறீங்க. அப்படித்தானே. நானே சொல்லிடறேன். என் பேரு கேசவ மூர்த்தி. டி.வி.யில நிறை புரோக்ராம் கொடுத்திருக்கேன். நாடோடி பாடல்களின் தொகுப்பு ஒண்ணை டி.வி.க்கு கொடுக்கலாம்னு ஏற்பாடு பண்ணி யிருக்கேன். பெரிய கம்பெனி ஒண்ணு ஸ்பான்சர் பண்ண சம்மதிச்சிருக்காங்க. மூன்று வாரத் தொடர். தலைப்பு கிராமத்து குயில்கள்னு வைச்சிருக்கேன்.'' - பார்வையை ரோட்டில் பதித்தபடியே பேசிக் கொண்டிருந் தார், கேசவமூர்த்தி.

''சரி சார். ரொம்ப சந்தோஷம். நான் என்ன செய்யணும்னு முதல்ல சொல்லுங்க.''

''சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வான்னு சொல்லாம சொல்றீங்க. சொல்றேன். சரசுவதி கலை அரங்கத்தில கவிதாவோட குரலைக் கேட்டேன். அப்பிடியே அசந்து போனேன். அந்த நிமிஷமே 'கிராமத்துக் குயில்கள்' தொட ருக்குப் பாடப்போறது கவிதான்னு முடிவு பண்ணிட்டேன். முத்தமிழ் இசைக்குழுவில போயி கேட்டேன். விஜயராஜா கிட்ட அசிஸ்டெண்டா இருக்கிற பாஸ்கரிடம் போங்க.

அவர் ஓகே சொன்னா கவிதா நிச்சயம் பாடுவாங்கன்னு சொன்னாங்க. நேரே இங்க வந்திட்டேன்.''

''கண்டிப்பா கவிதா பாடுவாங்க. நான் ஏற்பாடு பண்றேன்.'' - என்றான் பெருமையாய்.

அடுத்த மாதமே தொலைக்காட்சியில் கிராமத்து குயில்கள் ஒளிபரப்பானது. நவீனமாக மெட்டமைத் திருந்தார்கள். கிராமத்து பின்னணியில் கவிதா நடந்து கொண்டே பாடுவது போல ஒரு பாட்டை வடிவமைத் திருந்தார்கள். அது சூப்பர் ஹிட் பாடலாக அமைந்தது.

அந்தப் பாடலுக்கு கவிதா கடல் நீல சேலை காற்றில் அசைய மென்மையாக நடந்து முகத்தில் சிரிப்பு மாறாமல் பாடிய அந்த காட்சி பாஸ்கரின் கண்ணுக்குள்ளேயே நின்றது. கவிதா தனக்காகப் போகிறவள் என்ற நினைப்பும் நெஞ்சில் இனித்தது.

அவுத்தான்பட்டியிலிருந்து மாவடி வரை நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்த ஊர்களில் இருந்தெல்லாம் கவிதாவின் குரலை பாராட்டி கடிதங்கள் தொலைக்காட்சி நிலையத்தில் வந்து குவிந்தன.

டி.வி.யில் 'எதிரொலி' பகுதிக்காக முதிர் வயது ஆணும் இளம் வயது பெண்ணும் எதிர் எதிரே அமர்ந்து கடிதங்கள் படித்தார்கள்.

''அது யாரோட கடிதம்?''

''மூலைக்கரைப்பட்டி மாலதி.''

''என்ன சொல்லியிருக்கார்?''

கவிதாவின் குரல் எங்களை கிராமத்துக்கே அழைச் சிட்டுப் போயிடுச்சி. நாடோடிப் பாடல்கள் நல்ல தேர்வு.



இதை மறு ஒளிபரப்பு செய்து என் போன்றவர்கள் ஆசையை நிறைவேற்றுவீர்களா என்று கேட்டிருக்கிறார். கள்ளிகுளம் கனகா, வள்ளியூர் வரதன், பரப்பாடி பாஸ், ஆலங்குளம் பொன்னம்பலம், ஆவராந்தலை கிருஷ்ணன் போன்ற நேயர்களும் கிராமத்து குயில்களை மறு ஒளிபரப்பு செய்யும்படி கேட்டிருக்கிறார்கள்.

நேயர்கள் விருப்பப்படி அடுத்த வாரம் கிராமத்து குயில்கள் மறு ஒளிபரப்பு செய்யப்படும். ம்...அடுத்த கடிதம்...

அடுத்த வாரம் தொலைக்காட்சி நிலையத்தார் கிராமத்து குயில்களை மறுஒளிபரப்பு செய்தனர்.

'ஆத்து கரையோரம் நாணத்தால் வீடு கட்டி
ஆசை மச்சான் வரும் வழி மீது
என் ஆசையை விரிச்சி வைச்சேன்...''

-என்ற நாடோடி பாடல் டிவி பார்த்தவர்கள் உதடுகளில் எல்லாம் ஒட்டிக் கொண்டது.

இதற்கிடையில் பொங்கல் வர சிறப்பு நிகழ்ச்சியாக 'கிராமத்து குயில்கள்' மீண்டும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

கவிதா பாடிய நாடோடிப் பாடல்கள் ஆடியோ கேசட்டாய் வெளிவர விற்பனை பிய்த்துக் கொண்டு போனது.

டீக்கடையில், ஹோட்டல்களில் கவிதாவின் குரல் ஒலிக்க-பாத்ரூம் முணுமுணுப்புக்கும் இரவல் போனது.

சினிமா வட்டாரங்களில் கவிதாவின் குரல் பேசப் பட்டது. விஜயராஜா ஆச்சரியமாய் கேட்டார்.

''நம்மிடம் கோரஸ் பாட வந்த அந்த பொண்ணா இந்த போடு போடுகிறது.''

''அதே.''-என்றான் பாஸ்கர் சந்தோஷமாய்.

''நான் டி.வி.யில் பார்த்தேன். தெய்வீக அழகு. சினிமாவுக்கு கூட அந்த முகம் நல்லா வரும். உனக்கு அந்தப் பொண்ணு ரொம்ப சினேகிதமாமே...''

''ஆமா சார்'' - என்றான் குதூகலமாய். விஜயராஜா கொஞ்ச நேரம் சிந்தனை செய்யும் பாவனையில் அமர்ந் திருந்தார். பாஸ்கரின் கண்களை நேருக்கு நேராய் பார்த்து அந்த கேள்வியைக் கேட்டார்.

''கவிதாவை நீ காதலிக்கிறியா...?''

''... ... ...''

''பாஸ்கர் கேட்டது காதில விழுந்ததா... கவிதாவை நீ காதலிக்கிறியா...'' -'ஆமாம்' என்பது போல தலையசைத் தான்.

''கவிதா...?''

''தெரியலைசார்.''-என்று அவசரமாய் பொய் சொன்னான்.

## 12

கடற்காற்று ஆசையாய் கவிதாவின் கேசத்தை கலைத்துக் கொண்டிருந்தது. அலைகள் அவள் பாதத்தை தொட்டுத் தொட்டு சென்றது சற்று தள்ளி மணலில் அமர்ந்திருந்தான் பாஸ்கர்.

''நீங்க எதுக்காக பாஸ்கர் பொய் சொன்னீங்க?''

''எதோ தெரியல. அப்ப தோணுச்சி. சொல்லிட்டேன். நான் சொன்னது தப்பா கவிதா?''



''தப்புன்னு சொல்லல. அவர் கிட்ட நீங்க உண்மையைச் சொல்லி இருக்கலாம்.'' - பாஸ்கர் மவுனமாய் இருந்தான். மவுனத்தை கவிதா கலைத்தாள்.

''பாஸ்கர் உங்க பிரண்ட் சிகாமணி காதல் என்ன ஆச்சி?''

''ஒரு மாதம் தாடி வளர்த்தான். நேற்று... ஊறல் ஜாஸ்தியாயிடுச்சுன்னு தாடியை எடுத்துட்டான். தாடி யில்லாத தேவதாஸாம்.''

''அந்த பொண்ணு என்ன ஆனாள்...?''

''யாருக்குத் தெரியும். அந்த பொண்ணு அப்பா ஆட்டோவில வந்துட்டு போன பிறகு, இவன் அவளை தேடி போறதே இல்லை. கண்ணை மூடினா அவளோட அப்பா முகமும், அந்த பெரிய மீசையும்தான் கண் முன்னால வருதாம்.'' -இருவரும் சிரித்தார்கள்.

இவர்களை கண் இமைக்காமல் கவனித்துக் கொண் டிருந்த தூரத்து படகு மறைவு இளைஞனும் சிரித்தான். அவன் சிரிப்பில் கோபம் இருந்தது ஆத்திரம் தெரிந்தது. 'சிரிசிரி எத்தனை நாளைக்கு சிரிப்பாய்' என்ற தொனி தெரிந்தது. அவன் கையிலிருந்த பேனா கத்தி படகை பதம் பார்த்துக் கொண்டிருந்தது. அவனை இருவரும் கவனிக்க வில்லை.

''கவிதா இன்னும் ஆறே ஆறு மாசம். அதுக்கப்புறம் இப்பிடி ஹாய்யா இந்த கடற்கரையில வந்து நீ பேசி சிரிச்சுக்கிட்டிருக்க முடியாது.''

''ஏன், இன்னும் ஆறு மாதத்தில இந்த கடற்கரை காணாம போயி, கடல் மவுண்ட்ரோடு வரை வந்திடும்னு

உங்களுக்கு தெரிஞ்ச ஜோசியர் யாராவது சொன்னாரா...'' -என்று கேட்டாள் புன் சிரிப்பாய்.

''கவிதா உன்னோட எதிர்காலம் தெரியாம நீ பேசுறே. ரொம்ப சீக்கிரமாய் நீ சினிமா பாடகியா மாறப் போறே. இந்தியாவே உன் குரல்ல மயங்கப் போகுது. உன்னை பார்க்கிற இடத்தில எல்லாம் ரசிகர்கள் கூட்டம் வந்து மொய்க்கப் போகுது. ம். இப்ப சொல்லு. தனியா நீ கடற்கரைக்கு வந்து ஹாய்யா இருக்க முடியுமா?''

''பாஸ்கர் வர வர நீங்க ரொம்ப அழகாவே அறுக்கிறீங்க. நேரமாச்சு. புறப்படலாமா...''

''ஓ... நான் ரெடி.'' - மணல் உதறி எழுந்தான். இருவரும் கை கோர்த்தபடி நடந்தார்கள். எதிரில் வந்த முப்பது வயது பெண் கவிதாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு வந்தாள். அவர்களை கடக்கும் நேரம் முகம் முழுவதும் சிரிப்பாகி கவிதாவின் கை தொட்டாள்.

''நீங்க... நீங்க கவிதாதானே...''

''ஆமாம் கவிதாதான்.''

''கிராமத்து குயில்கள்ல அசத்திட்டீங்க. 'ஆத்து கரையோரம்' பாட்டை எத்தனை வாட்டி கேட்டாலும் சலிக்காது. எல்லாம் உங்க குரல். இப்படி ஒரு குரல் இந்தியாவிலேயே இல்லை. நீங்க சினிமாவுக்கு பாடலியா...'' - அந்த பெண் நீளமாய் வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தாள். அவஸ்தையாய் நெளிந்தாள் கவிதா.

''உங்க பாராட்டு ரொம்ப அதிகம். நன்றி அவசரமாய் போக வேண்டியதிருக்கு. வரட்டுமா.''



''என் பேரு பாரதி. சைதாப்பேட்டை. மறந்திடாதீங்க. கண்டிப்பா சினிமாவில் பாடுங்க. நான் எதிர்பார்த்துக் கிட்டே இருப்பேன்.''

-அந்தப் பெண் விடுவதாய் இல்லை. புன்சிரிப்பை பதிலாக்கி விட்டு, மெல்ல நகர்ந்தார்கள். அவர்கள் முதுகையே கவர்ச்சி நடிகையின் தீவிர ரசிகன் போல பார்த்துக் கொண்டு நின்றாள் அந்த பெண். அந்த படகு மறைவு இளைஞனும் அவர்கள் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். இதழோரம் இகழ்ச்சியாய் ஒரு புன்னகை.

''பார்த்தியா கவிதா, உன் பின்னால ரசிகர்கள் ஓடி வர ஆரம்பிச்சிட்டாங்க. ரசிகர் மன்ற தலைமைச் செயலாளர் பதவி எனக்குத்தான். பின்னால ஏமாத்திடமாட்டியே...''

''போங்க பாஸ்கர்'' - என்றாள் சிணுங்கலாய்.

''போய்ட்றேன். பதவி...?''

''என் மனசில உட்கார வைச்சிருக்கேனே, அது போதாதா பாஸ்கர்...?'' - 'போதும்' என்பது போல அவள் வலது கையை பிடித்து, மிருதுவாய் அழுத்தினான். இருவரும் மவுனமாய் நடந்து சாலைக்கு வந்தார்கள்.

பாஸ்கரிடம் விடைபெற்று ஆட்டோவில் ஏறி தன் தெருவுக்கு அடுத்திருந்த தார் ரோட்டில் இறங்கி, தெருவின் ஆரம்பத்திலிருந்த பிள்ளையாருக்கு ஒரு புன்னகையை சிந்திவிட்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

வீட்டை நெருங்கியவள் அதிர்ந்தாள். வாசலில் கறுப்பு பனியன் இளைஞன் அமர்ந்திருந்தான். அவன் உதடுகளில் விஷப் புன்னகை.

''நீயா...'' - என்றாள் குரல் நடுங்கியது.

''நானேதான். சாட்சாத் நானேதான். மணமகள்னு உன் பேரை போட்டு பக்கத்தில மணமகன்னு பேர் போட்டுக் கிட்டவன். பந்தல் போட்டு, வாழை கட்டி உனக்குத் தாலி கட்ட காத்திருந்தவன். சுலபமா ஏமாத்திட்டுமெட்ராஸ் ஓடி வந்திட்டே. ஓடி வந்திட்டா உன்னை விட்டுருவேன்னு நினைச்சியா... லேசில எதையும் விடமாட்டாண்டி இந்த மூர்த்தி. கதவைத் திறக்கிறியா...?''

''கதவை எதுக்காக திறக்கணும்... இங்க எதுக்காக வந்தே?''

''எதுக்கு வந்தேன்னா கேட்கிறே. நீ பேசாம ஓடி வந்திட்டே. எத்தனை பேரு துக்கம் விசாரிச்சான் தெரியுமா... அந்த நிமிஷமே முடிவு பண்ணிட்டேன், தாலி கட்டாட்டாலும் நீதான் பொண்டாட்டின்னு. கதவைத் திறக்கிறியா'' - என்று சிரித்தபடி அவள் தோளில் கை வைத்தான். அவசரமாய் அவன் கையை உதறினாள்.

''தொடாதே. நீ குடிகாரன், ஸ்திரி லோலன். உன்னை கட்டிக்க எந்த நல்ல பொண்ணும் சம்மதிக்க மாட்டா. நானும் சம்மதிக்கலே. அண்ணன், அண்ணி, நீ மூணு பேரும் சேர்ந்து என்னை வீட்டுக்காவல் வைச்சீங்க. எனக்கு வேறு வழி இல்லை. உன்னை கட்டிக்க சம்மதிக்கிற மாதிரி நடிச்சேன். கல்யாண மண்டபத்தில வச்சி தப்பிக்கிறதுக்கு சான்ஸ் கிடைச்சிது. தப்பிச்சு மெட்ராஸ் வந்தேன். இனி, உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அண்ணிக்கு தம்பிங்கற முறையில நீ அடிச்ச கூத்து போதும். மரியாதையா வந்த வழியே திரும்பி போயிடு.''

''என்னடி மரியாதை அது இதுன்னு நீளமா பேசுறே... முதல்ல கதவைத் திற. இப்போதைக்கு தப்பா எந்த நோக்கமும் என்கிட்ட இல்லை.''



''கதவைத் திறக்க முடியாது. என்னடா செய்வே...?'' -என்றாள் கோபம் குரலில் வெடிக்க.

''செய்யறேன்'' -என்றவன் மின்னல் வேகத்தில் பேனா கத்தியால் கவிதாவின் தோள் பட்டையில் கோடு கிழித்தான்.

'ஆ' என்று அலற எத்தனித்தவளின் வாய் பொத்தினான். கத்திக் கோட்டில் ரத்த முத்துக்கள் பிறந்திருந்தது.

''கதவைத் திறக்கிறாயா'' -திறந்தாள் பதட்டமாய். சாவகாசமாய் பாயை விரித்து அமர்ந்தான்.

''கவிதா ஒக்கார்றியா'' - பேசாமல் நின்றாள்.

''ஒக்கார்டி'' - என்றான் கத்தலாய். அவசரமாய் அமர்ந்தாள். ப்ளவுஸ் வியர்வையால் நனைந்து போயிருந்தது.

''கவிதா, நான் எதுக்காக இங்கே வந்தேங்கிறதை சொல்லிட்றேன். நாள் நட்சத்திரம் பார்த்து நம்ம கல்யாணத்தை நிச்சயம் பண்ணினாங்க. நீ ஓடிப் போயிட்டே. அதனால நாள் நட்சத்திரம் பார்க்காம நாளை காலையில நாம ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக்கிறோம்''

''ஆங்...'' -என்றாள் அதிர்ச்சியாய்.

''சந்தோஷ அதிர்ச்சியா...? வெரிகுட். நாளைக்கு காலையில குளிச்சி, புது மணத்தோட ரெடியா இரு. பூ, மாலை எல்லாம் போற வழியில வாங்கிக்குவோம். ரிஜிஸ்டர் மேரேஜ் முடிஞ்ச கையோட ஆசி வாங்க மதுரை போறோம். எப்படி அத்தான் சொல்றது சரிதானா... வரட்டுமா... மூர்த்தி அத்தான் போயிட்டு வாங்கன்னு வாயைத் திறந்து ஆசையாய் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா... கல்யாணப் பொண்ணு. வெட்கம் இருக்கத்தான் செய்யும்... சரி வர்றேன்.'' - என்று சொல்லிவிட்டு

வாசல்வரை நடந்தவன், திரும்பி கவிதாவை எச்சரிப்பது போல பார்த்தான்.

''இந்த மூர்த்தி ஒருவாட்டி ஏமாந்திட்டான். மறு படியும் ஏமாறத் தயாரா இல்லை. எங்காவது ஓடிப் போயிடலாம்னு திட்டம் போட்டே... உயிரோட விட மாட்டேன். கரெக்டா காலையில ஒன்பது மணிக்கு வருவேன் ரெடியாயிரு.'' - என்று சொல்லிவிட்டு வேகமாய் வெளியேறினான். கவிதா திக்பிரமை பிடித்தவள் போல இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்தாள். தோள்பட்டை சேலை, ரத்தத்தால் நனைந்திருந்தது. ரோஜா நிற கன்னங்கள் கண்ணீரால் நனைய ஆரம்பித்தது.

## 13

மறுநாள், காலை 8-55. கவிதா தயாராயிருந்தாள். நீல நிற சேலை அவள் அழகை அதிகப்படுத்தியிருந்தது. தலையிலிருந்த மல்லிகை காற்றை நறுமணப்படுத்தி யிருந்தது.

அவள் கண்கள் மூர்த்தியின் வரவை ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. நிமிஷத்துக்கு நான்கு முறை கைக்குட்டையால் வியர்வை ஒற்றினாள்.

சரியாக ஒன்பது மணி. வேகமாய் மூர்த்தி வந்தான். கவிதாவைக் கண்டதும் மூர்த்தியின் முகம் தாமரையாய் மலர்ந்தது.

''சொன்னமாதிரியே சமர்த்தா புறப்பட்டுட்டியே. இது தான் நல்ல பொண்ணுக்கு அடையாளம்''



''அது சரி. காறித் துப்பர பொண்ணு பின்னால சுத்தறது தான் நல்ல ஆம்பிளைக்கு அடையாளமா...?'' -ஆண் குரல் ஒன்று வீட்டுக்குள்ளிருந்து கேள்வி கேட்க- அதிர்ந்தான் மூர்த்தி. முகம் வெளிறி பின் கோபத்தில் சிவந்தது. பாஸ்கரும் சிகாமணியும் சிரித்தபடி வெளியே வந்தார்கள்.

''என்ன அதிர்ச்சியாயிருக்கா. தமிழ்நாட்டு எந்த மூலையில் இளம் பெண்கள் ஆபத்துன்னு அபய குரல் கொடுத்தாலும் அங்க நாங்க ஆஜராயிடுவோம். புரியுதா...'' -என்றான் சிகாமணி. சட்டென்று கோபம் சிகாமணி திசையில் பாய்ந்தது.

''நீ யாருடா... உனக்கும் இவளுக்கும் என்னடா சம்பந்தம்... மரியாதையா வெளியே போயிடுங்க. இல்லை கையை, காலை முறிச்சிடுவேன்.''

''தம்பி நாங்க போறது இருக்கட்டும். கவிதா மேஜர். கட்டாயத்தாலி கட்ட நினைக்கிறது சட்டத்துக்கு விரோதம். போலீஸ் வந்து முட்டிக்கு முட்டி தட்டி இழுத்துட்டு போறதுக்குள்ள நீயே போயிட்றது நல்லது. எப்படி சவுகரியம்...?'' - பாஸகரின் கேள்விக்கு பதில் சொல்லாமல், கவிதாவைப் பார்த்து சீறினான்.

''ஏண்டி, மெட்ராஸ் காதலன்களை வச்சி என்னை மிரட்றியா... நான் பனங்காட்டு நரி.''

''வாலை நறுக்கிட வேண்டியதுதான்'' -என்ற சிகாமணியை எட்டி உதைத்தான் மூர்த்தி. சிகாமணி கதவில் மோதி தரையில் சரிந்தான். அதே வினாடி மூர்த்தி கையில் பேனாகத்தி ஒன்று முளைத்திருந்தது.

''எவனாவது கிட்ட வந்தீங்க, குடலை எடுத்து வெளியே போட்டிருவேன். நீ என்னடி முழிக்கிறே பேசாம பின்னால வா. எதாவது கத்தினே கழுத்தில ஓட்டை போட்டிருவேன்.''

-பலவந்தமாய் கவிதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தான் மூர்த்தி. பாஸ்கர் திகைத்துப் போய் நிற்க-கீழே கிடந்த சிகாமணி சட்டென்று மூர்த்தியின் காலைப் பிடித்து இழுத்தான் படுவேகமாய்.

மூர்த்தி நிலை தடுமாறி கீழே விழுந்தான். கையில் இருந்த கத்தி எகிறி தூரமாய் போய் விழுந்தது.

அவசரமாய் எழும்ப முயற்சித்த மூர்த்தி மீது பாய்ந்தான் பாஸ்கர். முகத்தில் இலக்கில்லாமல் குத்தினான். இரண்டு பேரும் உருண்டு புரண்டார்கள்.

அடுத்த மூன்றாம் நிமிடம் தெருவில் நின்றான் மூர்த்தி. ஒரு கண் வீங்கியிருந்தது. சட்டை கிழிந்து தொங்கியது. உதட்டோரத்தில் சிவப்பு ரத்தம்.

''டேய் பாஸ்கர், முதல்ல உன் காதலை உடைக்கிறேன். அதுக்கப்புறம் உன் காலை உடைக்கிறேன்.''

''போடா உடைஞ்ச பயல... உன் சபதத்தை கொண்டு மவுண்ட் ரோட்ல போடு.'' - கோபமாய் முறைத்து விட்டு நடந்தான் மூர்த்தி. கத்தி அனாதையாய்க் கிடந்தது. கண் கலங்க நின்றிருந்தாள் கவிதா.

''முதல்ல உங்களிடம் மூர்த்திக்கும் எனக்கும் வலுக்கட்டாயமா கல்யாணம் நடக்க இருந்ததையும், நான் தப்பி வந்ததையும் சொல்லியிருக்கணும். சொல்லாதது என் தப்பு தான். என்னை மன்னிச்சிடுங்க பாஸ்கர்.''

- கண்ணீர் சிந்தியபடி பாஸ்கர் மார்பில் சாய்ந்தாள். அவன் இதமாய் அணைத்துக் கொண்டான்.

''கட்...கட்...'' - என்றான் சிகாமணி. இருவரும் வெட்கத்துடன் விலகிக் கொண்டார்கள்.

## 12

ஞாயிற்றுக்கிழமை நேரம் 8-22. நிம்மதியான தூக்கத்திலிருந்தான் பாஸ்கர். மோசமான கனவால் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் சிகாமணி. கழுத்து, முகம், மார்பெல்லாம் வியர்த்து போயிருந்தது. துடைத்தபடி படுக்கையில் இருந்து எழுந்தான். விலகியிருந்த லுங்கியை இறுக்கி கட்டிக் கொண்டான்.

பாஸ்கரைப் பார்த்தான். சீராக மார்பு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. 'தூக்கத்தை கலைக்க வேண்டாம்' என்ற முடிவுடன், துண்டை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு கீழே இறங்கினான்.

இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. வாசலில் ஆட்டோ ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணும், பதினெட்டு வயது இளம்பெண்ணொருத்தியும் இறங்கினார்கள்.

அந்த அறுபது வயது பெண் சிரத்தையாய் சில்லறைக் காசுகளை ஆட்டோவுக்காய் எண்ணிக் கொண்டிருக்க, இந்த இளம் பெண் சுற்றிலும் 'பராக்கு' பார்த்தாள்.

பாவாடை தாவணி, கண்ணாடி வளையல், நீண்ட சடை, ஜிமிக்கி, குங்குமப்பொட்டு என்று கிராமிய அழகு பளிச்சிட்டது. மாநிறம், துள்ளும் விழிகள். அவள் நடையில் கூட ஒருவித துள்ளல் தெரிந்தது. இருவரும் காம்பவுண்டுக்குள் நுழைந்தார்கள். அந்த இளம் பெண் பார்வையில் பட வேண்டும் என்ற ஆர்வத்தில் வேகமாய் படியிறங்கினான் சிகாமணி.

''நீங்க சேது மாமாவைத்தான் பார்க்கணும்''-என்றான் அவசரமாய்.

''இல்லை. நாங்க.''

''கணேசமூர்த்தி சார் வீட்டுக்கா...?''

''இல்லை. பாஸ்கரை பார்க்கணும்.''

''பாஸ்... கர்... நீங்க பாஸ்கருக்கு...''

''அம்மா.''

''அம்மாவா...? - என்று அதிர்ந்தவன், அவசரமாய் படிகளில் தாவி ஏறி, பாஸ்கரை எழுப்பினான்.

''டேய் பாஸ்கர் உங்க அம்மா வந்திருக்காங்கடா'' -திடீரென்று எழுப்பப்பட்ட பாஸ்கர் அரைத் தூக்கத்தில் 'திருதிரு' வென்று விழித்தான்.

''அம்மாவா... எங்கேடா'' - அவர்களை கீழே விட்டு விட்டு வந்தது நினைவுக்கு வர, பாஸ்கருக்கு பதில் சொல்லா மல் சிகாமணி வேகமாய் கீழே இறங்கினான். இரண்டு பேரும் மேலே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

''வாங்கம்மா... பாஸ்கர் மேலதான் இருக்கான். நான் அவன் பிரண்ட்.''

''சிகாமணிங்கிறது நீ தானா...?''

''நான்தாம்மா. மெல்ல வாங்க''-இருவரும் சிகாமணி பின்னால் படியேறிச் சென்றார்கள்.

''என்ன பாஸ்கர், எப்படிப்பா இருக்கே...''-அம்மாவின் கேள்விக்கு சட்டென்று பாஸ்கரால் பதில் சொல்ல முடியவில்லை. பாஸ்கரை வாஞ்சையுடன் அணைத்து உச்சி முகர்ந்தாள்.



''என்னம்மா... நீங்க திடீர்னு.''

''காரணமாத்தாம்ப்பா வந்திருக்கேன்''-என்றாள். அந்த இளம் பெண் கதவோரமாய் நின்று கொண்டிருந்தாள்.

''சுதா எப்படி நெடுநெடுன்னு வளர்ந்திருக்கா பார்த்தியா... உன்னைப் பார்த்ததும் வெட்கம் வந்திடுச்சி.''

''சுதா எப்படி இருக்கே... ம்... உட்காரு.'' - என்றான் சுரத்தில்லாமல். சுதா இன்னும் அதிகமாய் வெட்கம் வந்து கதவோடு ஒட்டிக் கொண்டாள். சிகாமணி எதுவும் போசாமல் அறையை விட்டு வெளியேறினான்.

அடுத்த பதினைந்தாவது நிமிடம் கையில் இரண்டு பெரிய பொட்டலங்கள், நான்கு காபியுடன் மேலே வந்தான்.

''பூப்பூவா இட்லி. ஆனியன் ரவா தோசை, தக்காளிச் சட்னி எல்லாம் சூடா இருக்கு. சாப்பிட்டுட்டு பேசுவோம். இல்லை பேசிக்கிட்டே சாப்பிடுவோம்.'' - அவன் பேச்சை மூன்று பேரும் ரசித்தாகத் தெரியவில்லை. பாஸ்கர் எழுந்து பல் துலக்கினான். பிறகு நால்வரும் பேசாமல் சாப்பிட்டு முடித்தார்கள்.

''ம்... சொல்லுங்க... எதுக்காக நீங்களும் சுதாவும் திடீர்னு புறப்பட்டு மெட்ராஸ் வந்தீங்க. மாசாமாசம் ஒழுங்க பணம் அனுப்பிகிட்டு இருக்கேன்ல.''

''அது மட்டும் போதுமாப்பா. உன்னை நம்பி எங்கோ ஒரு கிராமத்தில உயிரை பிடிச்சிக்கிட்டு இருக்கிற உங்க அம்மாவையும், மாமன் பொண்ணையும் நீ பார்த்து எத்தனை வருஷம்ப்பா ஆகுது?''

''இரண்டு வருஷம் இருக்கும்''-என்றான் குற்ற உணர்வுடன்.

''முழுசா மூணு வருஷமும், மூணு மாசமும் ஆகுது. உன்னை பார்க்கணும்னு பெத்தவளுக்கு ஆசை இருக்காதா? தாயையும், தகப்பனையும் பறி கொடுத்திட்டு தஞ்சம்னு வந்திருக்காளே, அவளோட எதிர்காலம் பற்றி என்றைக் காவது நினைச்சி பார்த்திருக்கியாப்பா...?'' - பாஸ்கர் மவுனமாய் இருந்தான்.

''பிள்ளை மனசு கல்லா போயிடுச்சி. பெத்த மனசு பித்துதானப்பா. அதனாலதான் இந்த வயசில உன்னை பார்க்க ஓடோடி வந்திருக்கேன். உனக்காக காத்திருக்கிற உன் மாமன் பொண்ணுக்கும் வயது நின்னுகிட்டேவா இருக்குது. வர்ற தைமாசம் கல்யாணத்தை வைச்சிபுடலாம்னு சின்ன தாத்தா விருப்பப்படறாரு. நீ முப்பது நாளுக்கு ஒரு கடுதாசி கூட போடறதில்லை. கடுதாசிக்கு கடுதாசி கல்யாணத்தை எப்ப வச்சுக்கலாம்னு கேட்டு நாலுவரி எழுதத்தான் செய்றேன். நீ அதைப் பற்றி ஒரு வரி கூட பதில் எழுதுற தில்லை. மணியார்டர் பாரத்தில நாலு வரி எழுதியிருப் பேன்னு வாங்கி பார்த்தா, அதுவும் இந்த பொண்ணு மனசு போல வெள்ளையாத்தான் இருக்குது...''-நீளமாய் பெரு மூச்சொன்றை வெளியிட்டாள். பேச்சைத் தொடர்ந்தாள்.

''ம்... நாலு வரி எழுத கூட உனக்கு நேரமில்லாம போயிடுச்சி. நீ தான் என்ன செய்வே... பொங்குறதுக்கும் துவைக்கிறதுக்கும் ஒரு ஆள் இருந்தா, உனக்கும் நேரம் இருக்கும். என்ன சொல்றே... தை மாசம் ஒரு நல்ல நாள் பார்த்து கல்யாணத்தை வைச்சிடலாமா...?-என்று கேட்டாள் பாஸ்கர் அம்மா.

பாஸ்கர் பேசாமல் சுவர்க் கடிகாரத்தை பார்த்துக் கொண்டிருந்தான். சுதா முகத்தில் துள்ளல் மறைந்து கவலை வந்து அமர்ந்திருந்தது. சிகாமணிக்கு நிலைமையின் தன்மை



புரிய காபி கொண்டு வந்த டம்ளர்களை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

''பாஸ்கர் பேசாம இருந்தா எப்பிடி? பதில் சொல்லுப்பா.''

''இரண்டு வருஷம் பொறுத்து கல்யாணம் செய்யலாம்னு நினைக்கிறேம்மா. அதுக்குள்ள ஒரு படத்துக்காவது சொந்தமா இசை அமைக்கிற வாய்ப்பு கிடைச்சிடும். என் ஆசையும் நிறைவேறிடும்.''

''உன் ஆசையை மட்டும் பார்த்தா போதுமா... உன் பெத்தவ ஆசையையும் பாருப்பா. நான் நல்லா இருக்கும் போதே என் மடியில என் பேரப்புள்ள விளையாடணும்ப்பா. செத்துப் போன மாமன் ஆத்மாவும் உன்னால சந்தோஷப்படணும்.''

- பாஸ்கர் அம்மா நா தழுதழுத்தது. கண்களில் இருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது. சுதா கண்களிலும் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

''இப்ப எதுக்காக அழுறீங்க.''

''அழுறதை தவிர என்னால என்னப்பா முடியும்.''

''ம்... எண்ணி முப்பது நாள் கழிச்சி ஊருக்கு வர்றேன். அங்க பேசிக்கலாம். இன்னிக்கு சாயங்காலம் உங்களுக்கும் சுதாவுக்கும் துணி எடுக்கப் போகலாம்.''

''இப்ப ஒண்ணும் வேண்டாம்ப்பா. நீ ஊருக்கு வரும்போது வாங்கிட்டு வா. பெத்தவ மனசை குளிர வைக்கணுங்கிற முடிவோட வா. நாங்க போயிட்டு வர்றோம்.'' - சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்த படி எழுந்து கொண்டாள் பாஸ்கரின் அம்மா. சிகாமணி அறைக்குள் நுழைந்தான்.

''என்னம்மா அவசரமாய் புறப்பட்டுட்டிங்க.''

''வந்தேன். மகனை பார்த்து பேசிட்டேன். வேற என்ன வேலை. புறப்பட்டுட்டேன்.''

- மெலிதாய் சிரித்தாள். அந்த சிரிப்பில் கவலை பொதிந்திருந்தது. அம்மாவின் பிடிவாதம் தெரிந்த பாஸ்கர் அவசரமாய் சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டான் அம்மாவையும் மாமன் மகளையும் பஸ் ஏற்றிவிட.

**நா**ல்வரும் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தார்கள். சுதாவின் பார்வை அடிக்கடி ஏக்கத்தோடு பாஸ்கரை தொட்டுத் தொட்டு மீண்டது. அதை அவன் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

## 15

**பி**ரசாத் பதிவுக் கூடம். விஜயராஜா வாயிலிருந்து விழும் மெட்டுக்கு வெள்ளைத்தாளில் கறுப்பு எழுத்துக் களை பிறப்பித்து கொண்டிருந்தார் கவிஞர் இளமாறன். காதல் தோல்வியில் வாடும் கதாநாயகிக்காய் எழுதப்படும் பாடல் இது.

டைரக்டரின் திடீர் ஆசையால் இன்னும் பதினைந்து நாளில் ரிலீஸ் ஆக வேண்டிய படத்துக்காக இசையமைக்கப் படும் கடைசி பாடல். தன் பால்ய நண்பரான டைரக்டரின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல், மற்ற பட வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு, அந்த சோக பாடலுக்காய் மெட்டமைத்து கொண்டிருக்கிறார் விஜய ராஜா. நண்பகலுக்குள் பாடலை பதிவு செய்தாக வேண்டும்.



நண்பகலுக்கு மேல் ஷூட்டிங். பிரபல நடிகை மதனாஸ்ரீ எட்டுமணி நேர கால்ஷீட் கொடுத்திருக்கிறாள். இந்த கால்ஷீட்டை வீணாக்கினால் ஒரு மாதத்துக்கு கால்ஷீட் கிடைக்காது. அந்த அவசரம் டைரக்டருக்கு. விஜயராஜா காலில் விழாத குறையாக கெஞ்சி விட்டு சென்றிருந்தார்.

விஜயராஜாவின் வாய் மெட்டை உதிர்த்துக் கொண்டிருந்தாலும், கண்கள் அடிக்கடி வாசல் பக்கம் சென்றது. யாரையோ எதிர்பார்த்தது.

கவிஞர் இளமாறன் பாட்டை எழுதி முடித்தார். வாங்கி பார்த்த விஜயராஜா திருப்தியாய் தலையசைத்தார்.

கைக்கடிகாரத்தை பார்த்தார். நேரம் 9-15. நெற்றி சுருக்கினார். வலது கை தன்னிச்சையாய் காதுநுனி வருடியது. அது அவர் கோபத்தை உணர்த்தியது.

''பாஸ்கர் இங்க வாப்பா'' - அருகே சென்றான்.

''சுசித்ராவை எத்தனை மணிக்கு வரச் சொன்னே...''

''எட்டு மணிக்கு சார்.''

''இப்ப மணி என்ன...?''

''ஒம்பதே கால்.''

''இவ மனசில என்ன நினைச்சிக்கிட்டிருக்கா. இதே இவளுக்கு வழக்கமா போச்சி. இவளை விட்டா ஆள் இல்லைன்னு நினைச்சிகிட்டாளா. நான் நினைச்சா இவளை மாதிரி பத்து சுசித்ராவை உருவாக்குவேன் தெரியுமில்லை. பாஸ்கர் நீ உடனே போன் பண்ணி சுசித்ராவை வர வேண்டாம்னு சொல்லிடு.''

''சார்...'' - என்றான் அதிர்ச்சியுடன்.

''சொன்னதை செய் மேன்''-என்றார் கத்தலாய். அடுத்த நிமிடம் 'வர வேண்டாம்' என்ற தகவல் தொலைபேசியில் பறந்தது சுசித்ராவுக்கு.

''வர வேண்டாம்னு சொல்லிட்டேன் சார்.''

''வெரிகுட். உடனே கார்ல போயி ராகினியை அழைச்சிட்டு வா... அந்தம்மா இல்லைன்னா டிவியில பாடிச்சே ஒரு பொண்ணு அங்... கவிதா. அதை வரச் சொல்லு. இன்னும் அரை மணி நேரத்தில யாராவது இங்கே பாடணும். ம்... போ.''-கோபமாய் கார் சாவியை வீசினார். சாவியை லாவகமாய் பிடித்தவன், உற்சாகமாய் காரை நோக்கி நடந்தான்.

பாடகி ராகினி வீட்டை அலட்சியம் செய்து விட்டு கார் பறந்தது. பாஸ்கரின் மனம் ரப்பர் பந்தாய் குதித்துக் கொண்டிருந்தது.

குறிப்பிட்ட இடம் வந்ததும், ரோட்டோரமாய் காரை நிறுத்தி விட்டு பாட்டொன்றை முணுமுணுத்தபடி நடந்தான். நடையில் துள்ளல். ஆனந்தம்.

தெரு முனை பிள்ளையாருக்கு 'வணக்கம்' சொன்னான். 'தேங்காய் உடைக்கிறேன் பிள்ளையாரப்பா... கவிதா பாடப் போகும் பாட்டு சூப்பர் ஹிட் ஆகட்டும்' என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டான்.

வேகமாய் நடந்து கவிதா வீட்டை நெருங்கினான். வீடு திறந்து கிடந்தது. உற்சாகமாய் உள்ளே நுழைந்தான். அங்கே கவிதா இல்லை.

''கவிதா பொண்ணு, உன்னைத்தான தம்பி தேடிப் போயிருக்குது. நீ இங்க வந்திருக்கே. அது அங்க போயிருக்கும்.'' - பாஸ்கருக்கு ஏமாற்றமாய் இருந்தது.



இருந்தாலும் பிரசாத்துக்குத்தான் போயிருப்பாள் என்ற நினைப்பு உள்ளுக்குள் ஆறுதலாய் இருந்தது.

சோர்வாய் காரை நெருங்கியவனை கம்பு ஒன்று தடுத்து நிறுத்தியது. நிமிர்ந்தான், சிரித்தபடி நின்று கொண்டிருந்தான் மூர்த்தி. சற்று தள்ளி நான்கு பேர் கைகளில் ஆயுதங்களுடன்.

''புள்ளிமானை பிடிக்கத்தான் வந்தோம். வலையில குள்ள நரி விழுந்திடுச்சி.''

''யாருடா குள்ள நரி?'' -கோபமாய் மூர்த்தி மேல் பாய்ந்தான் பாஸ்கர். பின்னந்தலையில் கழி ஒன்று மின்னல் வேகத்தில் தாக்கியது.

''யம்மா''-என்று அலறியபடிசுருண்டு விழுந்தான். வீச்சரிவாள் மேனியை பதம் பார்த்தது. ரத்தம் குபுக்கென்று பொங்கி வழிந்தது.

அதே நேரம் பிரசாத் பதிவுக் கூடத்தில் கவிஞர் இளமாறனின் கவிதை வரிகளை கவிதா சோகக் குரலில் பாடிக் கொண்டிருந்தாள். ஃஸ்டிரியோ போனிக் இசை நனைத்துக் கொண்டிருந்தது. சுசித்ராவுக்கு சரியான போட்டி கிடைத்து விட்ட சந்தோஷத்தில் விஜயராஜா இருந்தார்.

## 16

கோமதி ஆஸ்பத்திரி. இன்டென்சிவ் கேர் யூனிட். இரண்டு பெரிய கட்டுக்களுடன் படுத்திருந்தான் பாஸ்கர். மயக்கத்தில் இருந்தான். குளுகோஸ் டிரிப் பாட்டில் சொட்டு சொட்டாக தன் எடையைக் குறைத்துக் கொண்டிருந்தது. செயற்கை சுவாசம் சீராக நடந்து கொண்டிருந்தது.

டாக்டர் அறையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி கவலையுடன் அமர்ந்திருந்தனர் கவிதாவும், சிகாமணியும், விஜயராஜாவும். டாக்டர் சந்திரசேகரன் தொண்டையை கனைத்துக் கொண்டு மீண்டும் பேசினார்.

''பாஸ்கர் இருக்கிற நிலைமை உங்களுக்கு ஓரளவு புரிஞ்சிருக்ககும்னு நினைக்கிறேன். டீப் கோமாவுக்கு போனாலும் ஆச்சரியப்பட்றதுக்கில்லை. மூளையில இருக்கிற ரத்த நாளங்கள் வெடிச்சி போயிருக்குது. இந்த நிலைமையில பாஸ்கரால மூச்சுவிட மட்டும்தான் முடியும். இதயம் மட்டும் கவலைப்படாம ஓடிக்கிட்டிருக்கும். வேற எதுவுமே முடியாது. இப்பிடியே விட்டா...''

''டாக்டர்... அவர் பேசறதுக்கு, முன்ன போல சிரிக்கிறதுக்கு ஏதாவது செய்ங்க டாக்டர்''-என்றாள் கவிதா கண்ணீருடன்.

''ஒரே ஒரு வழிதாம்மா இருக்குது. தலையில மேஜர் ஆபரேஷன் ஒண்ணு செய்தாகணும். அதுவும் நாப்பத்தெட்டு மணி நேரத்துக்குள்ள.''

''உடனே செய்ங்க டாக்டர்''-என்றான் சிகாமணி.

''அது என்னால முடியாது. அமெரிக்காவில கிளாங்ஸ்டன்னு ஒரு மூளை மருத்துவ நிபுணர் இருக்கார். அவரை வரவழைச்சி இந்த ஆப்ரேஷனை செய்தா நிச்சயம் சக்சஸா முடியும். அவர் ஒரு ஆபரேஷனுக்கு ஐம்பதாயிரம் பீஸ் வாங்குகிறார். நான் அழைச்சா உறுதியா வருவார். எப்படியும் லட்சம் ரூபாய்க்கு மேல செலவாகும்.'' -அந்த அறையில் மவுனம் நிலவியது.

''பேஷண்டுக்கு அந்த அளவுக்கு வசதி இருக்குதா...?''

''இல்லை டாக்டர்''-என்றான் சிகாமணி.



''இதை இப்படியே விட்டுட்டா டீப் கோமாவா ஆயிடும். பெட்ஸோர் வந்து உடல் அழுகலாம். இப்படியே ஆறு மாசமோ, ஒரு வருஷமோ இருந்து கடைசியில...''

''சொல்லாதிங்க டாக்டர்'' என்றாள் கவிதா.

''மருத்துவ உண்மையைத்தான் சொல்றேம்மா. சாயங் காலத்துக்குள்ள ஒரு முடிவோட வாங்க. ஒரு லட்சத்தை கட்டிட்டா டாக்டர் கிளாங்ஸ்டனை அடுத்த ப்ளைட்ல வரவழைச்சிடலாம்.''

''ஓ.கே.டாக்டர் வர்றோம்.''

-மூவரும் எழுந்து வெளியே வந்தார்கள். விஜயராஜா எதுவும் சொல்லாமல் காரில் ஏறிச் சென்று விட்டார். சிகாமணியும் கவிதாவும் கண்கலங்க நின்று கொண்டிருந் தார்கள்.

## 17

சிகாமணிக்கு ஆச்சரியமாயிருந்தது. விஜயராஜாவும் கவிதாவும் ஆஸ்பத்திரிக்கு வரவில்லை இரண்டு நாளாய். அமெரிக்க டாக்டர் கிளாங்ஸ்டன் வந்து விட்டார். ஒரு லட்சம் பணமும் கட்டப்பட்டு விட்டது. பணம் கட்டியது யார் என்று டாக்டர் சந்திரசேகரன் சொல்ல மறுத்து விட்டார். ஆபரேஷன் வெற்றியாய் முடிந்தது.

இரண்டு நாள் கழித்து விஜயராஜா ஒரு முறை, கவிதா ஒரு முறை பார்த்து விட்டுச் சென்றார்கள். அருகிருந்து கவனித்தான் சிகாமணி.

பாஸ்கர் கண் விழித்ததும் முதல் கேள்வியாய் 'கவிதா பாடினாளா' என்று கேட்டான். 'ஆம்' என்ற பதிலுக்கு ரொம்ப சந்தோஷப்பட்டான்.

பாஸ்கரை அதிகம் பேச வேண்டாமென்று சொல்லியிருந்தார் டாக்டர். அதிர்ச்சி தரும் செய்திகள் எதுவும் சொல்ல வேண்டாம் என்று சிகாமணியையும் எச்சரித்திருந்தார்.

விஜயராஜா உற்சாகமாய் வந்து இசையமைப்பு வேலைகளை பற்றியும், பாஸ்கர் இல்லாமல் தான் படும் அவதிகளைப் பற்றியும் பத்து நிமிடம் பேசிவிட்டுச் சென்றார். கவிதா வரவே இல்லை.

கவிதா ஏன் வரவில்லை, ஏன் வரவில்லை என்று சிகாமணியை துளைத்தெடுத்தான் பாஸ்கர். அண்ணனுக்கு உடல் நலமில்லையென்று தந்தி வந்ததால் அவசரமாய் புறப்பட்டு சொந்த ஊர் போயிருப்பதாக பொய் சொன்னான். அவனுக்கும் கவிதா ஏன் வரவில்லை என்ற கேள்வி மனதுக்குள் அலைமோதிக் கொண்டுதான் இருந்தது.

அடுத்த சில தினங்களில் உடல் நலம் தேறி நடக்க ஆரம்பித்தான் பாஸ்கர். கவிதாவைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு அவனுக்குள் அதிகம் இருந்தது. அந்த துடிப்பைப் புரிந்து கொண்டவர் போல நவம்பர் இருபத்தேழில் டிஸ்சார்ஜ் செய்யப் போவதாக கூறினார் டாக்டர் சந்திரசேகரன்.

அதே நேரம் சென்னை பிரதான சாலையிலிருக்கும் அச்சகம் ஒன்று 'நவம்பர் 27' என்ற எழுத்துக்களை பொன் எழுத்துக்களாக்கி துப்பிக் கொண்டிருந்தது.

அதே நேரம் ஆஸ்பத்திரியின் அருகிலுள்ள பெட்டிக் கடை ஒன்றில் காலை தினசரியை வாங்கிய சிகாமணி முதல்



பக்கத்தில் 'பளிச்' சென்று அச்சாகிருந்த 'நவம்பர் 27' என்ற கறுப்பு எழுத்துக்களை அதிர்ச்சியுடன் கண் அசையாமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவன் கண்கள் தொட்டுக் கொண்டிருந்த செய்தி இதுதான்.

இசையமைப்பாளர் விஜயராஜாவுக்கும், பின்னணிப் பாடகி கவிதாவுக்கும் திருமணம். நவம்பர் 27-ந் தேதி திருப்பதியில் நடக்கிறது.

கோபத்தில் சிகாமணியின் உதடு துடித்தது. பேப்பரை சுருட்டி கையில் வைத்துக் கொண்டு ஆத்திரமாய் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான். அவனை உரசியபடி படகுக்கார் ஒன்று வந்து நின்றது. எரிச்சலுடன் திரும்பினான். காருக்குள்ளிருந்து ஒரு இளம்பெண் எட்டிப் பார்த்தாள். அந்தப் பெண் கவிதா.

''சிகாமணி வாங்க ரூமுக்கு போயிடுவோம்.'' -பேசாமல் காரில் ஏறினான்.

## 18

''பேப்பரைப் பார்த்தீங்களா...''-என்று கேட்டான் கோபமாய்.

''பார்த்தேன்''-என்றாள் அமைதியாய்.

''இது உண்மைதானா...?''

''உண்மைதான்.''

''உங்க சம்மதத்தோடதான் இந்த கூத்தெல்லாம் நடக்குதா, இல்லை...''

''என் பரிபூர்ண சம்மதத்தோடதான்'' - என்ன பேசுவது என்று புரியாமல் கொஞ்ச நேரம் அமைதியாயிருந்தான் சிகாமணி.

கவிதா ஹேண்ட் பேக்கை திறந்து 'பளபளா' கார்டு ஒன்றை எடுத்து நீட்டினாள். வாங்கிப் பிரித்து பார்த்தான். திருமண அழைப்பிதழ். விஜயராஜா புகைப்படமும், கவிதா புகைப்படமும் அச்சிடப்பட்டிருந்தது.

''கவிதா நீங்க மனசாட்சியை எத்தனை பணத்துக்கு அடகு வைச்சிங்க...ம்... சொல்லுங்க... உங்களுக்கு பணம் புகழ்தான் பெரிசு. இல்ல, அதுக்காக உண்மையான காதலை தூசு மாதிரி உதறிட்டிங்க. உங்களுக்காக மரண வாசல் வரை போயிட்டு வந்த அப்பாவி காதலனை மிதிச்சி தள்ளிட்டிங்க. கொஞ்சமாவது நினைச்சி பார்த்திங்களா... இதை கேள்விப் பட்டா அந்த மனசு என்ன பாடுபடும்னு. உங்களுக்கு அதைப் பற்றி என்ன கவலை. உங்களுக்கு வேண்டியது பணம். பணத்துக்காக கிழவனுக்கும் மாலை போடுவீங்க. போங்க... போங்க... பணத்தை நோக்கி ஓடுங்க. உங்களை மாதிரி பொண்ணுங்களை நம்பி வர்ற முட்டாள் காதலன்கள் எல்லாம் கடல்ல விழுந்து சாகட்டும். கடல் நிரம் பட்டும்.''-என்றான் கோபம் வெடிக்க.

''பேசி முடிச்சிட்டீங்களா சிகாமணி... நான் கொஞ்சம் பேசணும்.''

''பேசுங்க. எதும்னாலும் பேசிட்டு போங்க.''

''சிகாமணி, கசப்புன்னு தெரிஞ்ச பிறகும் அதை விழுங்க வேண்டிய கட்டாயம் ரொம்ப கொடுமை. நான் அப்படிப்பட்ட இக்கட்டில மாட்டிக்கிட்டேன். பாஸ்கருக் காக பெரிய கசப்பை காலம் முழுசும் விழுங்க தீர்மானிச்



சுட்டேன். கொஞ்ச நாளுக்கு முன்னால பாஸ்கர் அம்மாவும், மாமன் மகளும் வந்திருந்தாங்க ஞாபகம் இருக்குதா... அவங்க என்னை பார்த்துட்டுதான் பாஸ்கரை பார்க்கப் போனாங்க. என்கிட்ட பாஸ்கர் அம்மா என்ன சொன்னாங்க தெரியுமா... 'பாஸ்கரை நம்பிதான் நாங்க இரண்டு பேரும் இருக்கோம். அவனை எங்ககிட்டேயிருந்து பிரிச்சி, அநியாயமா இரண்டு உயிரை சாகடிச்சிடாதேம்மா'ன்னு சொன்னாங்க. நான் அன்னிக்கே ஆடிப் போயிட்டேன். பாஸ்கர் அம்மாவை வரவழைத்தது மூர்த்திங்கிறது பின்னால தான் எனக்கு தெரிய வந்துச்சி.''

''எதுக்காக விஜயராஜாவை கல்யாணம் செய்ய சம்மதிச்சிங்க... அதை சொல்லுங்க.'' -என்றான் எரிச்சலுடன்.

''சொல்றேன். பாஸ்கர் உயிரை காப்பாத்துறதுக்கு ஒரு லட்சம் கட்டினது யார் தெரியுமா? விஜயராஜா. அதுக்கு பேசப்பட்ட விலைதான் என் காதல். பாஸ்கர் உயிருக்காக என் காதலை அர்ப்பணிச்சேன். எனக்கு வேற வழி தெரியல. மனைவியை இழந்த விஜயராஜாவுக்கு மனைவி ஆக சம்மதிச்சேன். அடுத்த நிமிஷம் ஒரு லட்சம் கட்டப்பட்டது. அமெரிக்க டாக்டர் ப்ளைட்ல பறந்து வந்தாரு, பாஸ்கரும் நல்ல சுகமாகி எழுந்திட்டாரு.''-சிகாமணி மவுனமாய் இருந்தான். கவிதாவிடமிருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

''என் காதல் மட்டும் இல்லை. மூர்த்தி, என் அண்ணன், அண்ணி எல்லாருமே விலை போயிட்டாங்க விஜயராஜாவிடம். இனி கடல்ல இறங்கின பாய்மரமா காற்று அடிக்கிற திசையில போக வேண்டியதுதான். பாஸ்கருக்கு இன்னொரு ஏற்பாடும் செய்ய ஒப்புக் கொண்

டிருக்கிறார் விஜயராஜா. பிரபல டைரக்டர் கே.கே.ஆரின் அடுத்த படத்துக்கு இசை பாஸ்கர்தான்.''

''என்னை மன்னிச்சிடுங்க கவிதா. உங்க தியாகம் தெரியாம எது எதோ பேசிட்டேன். நீங்க கற்பூரம் கவிதா கற்பூரம்.''

''கற்பூரமோ, கரித்துண்டோ... எதோ ஒண்ணா இருந்துட்டு போறேன். பாஸ்கரை மட்டும் நல்லா கவனிச்சிக்குங்க. உற்காசப்படுத்தி இசை அமைக்க வைங்க. சுதாவுக்கும் பாஸ்கருக்கும் கல்யாணம் நடக்கணும். அது உங்க பொறுப்புதான்... எந்தக் காரணம் கொண்டும் நான் சொன்னது எதுவும் பாஸ்கருக்கு தெரிய வேண்டாம்... நான் வர்றேன்.'' - பதிலுக்கு காத்திருக்காமல் வெளியேறினாள் கவிதா. பித்துப் பிடித்தவன் போல அமர்ந்திருந்தான் சிகாமணி.

## 19

நவம்பர் இருபத்தேழு. சூரியன் சூடாகி இருந்த முற்பகல். டாக்ஸியிலிருந்து இறங்கினார்கள் பாஸ்கரும், சிகாமணியும்.

சேதுமாமா வீட்டில் இல்லை. கனத்த பூட்டு தொங்கியது. மெல்ல படிகளில் ஏறினார்கள். பூட்டு திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

''இரண்டு ஆரஞ்ச் ஜூஸ் வாங்கிட்டு வந்துட்றேன்.'' -என்று சொல்லிவிட்டு சென்றான் சிகாமணி. பாஸ்கர் படுக்கையில் அமர்ந்தான். அறையை ஒரு முறை நோட்டம் விட்டான். நிறைய தூசி. தினசரி காலண்டர் இறந்து போன நாட்களையும் சுமந்து கொண்டிருந்தது.



எழுந்தான். காலண்டர் தாட்களை வரிசையாய் நவம்பர் இருபத்தேழு வரை கிழித்து, கசக்கி குப்பை கூடையில் வீசியவன் கண்களில் அந்த 'பளபளா' அட்டை பட்டது. குப்பை கூடையில் கிடந்த அந்த அட்டையை கையில் எடுத்து பிரித்தான். திருமணநாள் இருபத்தேழு என்றது. விஜயராஜாவும், கவிதாவும் சிரித்தார்கள், நிழல் படமாய்.

பாஸ்கர் தலைக்குள் ஆயிரம் மின்னல் வெட்டியது போலிருந்தது. கண்கள் இருட்டியது. கைகால்கள் மெலிதாய் நடுங்கின. படிகளில் சிகாமணி வரும் சத்தம் கேட்க, அவசரமாய் திருமண அழைப்பிதழை தலையணைக்கடியில் மறைத்தான். கஷ்டப்பட்டு புன்னகை வரவழைத்தான்.

''என்னடா சிரிக்கிறே...?'' - டம்ளர்களுடன் உள்ளே நுழைந்த சிகாமணி கேட்டான்.

''ஏன்...நான் சிரிக்கவே கூடாதுன்னு முடிவு பண்ணிட்டிங்களா...?''

''நல்லா சிரி. முதல்ல ஜூஸை குடி.'' - ஜூஸை வாங்கி குடித்து விட்டு, அப்படியே சரிந்து படுதுதான்.

''என்ன படுத்துட்டே...?''

''நீயும் படு.''

''படுக்கிறதா... நாயர் கடை வரை போயி சாப்பிட்டுட்டு உனக்கும் சாப்பாடு வாங்கிட்டு வந்திட்றேன்.''-சிகாமணி போனதும் தலையணைக்கடியில் இருந்த அழைப்பிதழை எடுத்தான். இரண்டு முறை படித்தான்.

நெருப்பு பெட்டியை தேடி எடுத்து அழைப்பிதழுக்கு நெருப்பு வைத்தான். அது எரிந்து, கருகி சாம்பல் ஆவதை புன்சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரம் சன்னல் வழியாய் தூரத்து வானம் பார்த்தான். அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான். கவிதா பாடிய ஆடியோ கேஸட்டை டேப்ரெக்கார்டரில் செருகி 'ஆன்' செய்ய, கீழே சிகாமணி குரல் கேட்டது. அவசரமாய் 'ஆப்' செய்தான்.

சிகாமணி கொண்டு வந்த சாப்பாட்டை சாப்பிட்டு முடித்ததும், உறக்கம் வருவதாக முதுகு காட்டி படுத்துக் கொண்டான் பாஸ்கர். சிகாமணி படுத்ததும் தூங்கிப் போனான். பாஸ்கர் தூங்கவில்லை. நான்கு மணிக்காய் காத்திருந்தான்.

நான்கு மணியானதும் குளித்து விட்டு வந்து சிகாமணியை எழுப்பினான்.

''என்னடா இது. டாக்டர் வெந்நீர்ல குளிக்கச் சொன்னார்... நீ...''

''சாகமாட்டேன். பயப்படாதே குளிச்சிட்டு வா.'' -சிகாமணி குளித்து விட்டு வருவதற்குள் அழகாய், கச்சிதமாய் புறப்பட்டிருந்தான் பாஸ்கர்.

''எங்கே புறப்பட்டுட்டே.''

''எங்கேயா... மறந்தே போயிட்டியா... ரிசப்ஷனுக்கு.''

''ரிசப்ஷனா...?''

''கவிதா விஜயராஜா திருமண வரவேற்பு மாலை ஐந்து மணி... ம்... புறப்படு.'' - வாய் பிளந்து நின்றான் சிகாமணி.